பக்கங்கள்-16 06.கார்த்திகை.2022 விலை–50.00




# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713564443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –388




## சர்வாதிகார நாடுகளால் இலங்கையின் புலனாய்வுக் கட்டமைப்புக்கு ஆபத்து!

## தமிழர்கள் தமிழ் தேசியத்தின் கீழ் அணி திரள வேண்டும், ஒற்றுமையின்மையே தமிழர்களின் வீழ்ச்சிக்கு காரணம்

## தமிழீழ விடுதலைப்புலிகளும், பயங்கரவாத தடைச்சட்டமும்

# சர்வாதிகார நாடுகளால் இலங்கையின் புலனாய்வுக் கட்டமைப்புக்கு ஆபத்து!

இன்றைய சமகால அரசியலில் இலங்கையில் சர்வதேச நாடுகளினது அழுத்தம் ஆக்கிரமித்துள்ளது என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டியிருக்கிறது. இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் தத்தமது சர்வாதிகாரப் போக்கினை இலங்கை மீது பிரயோகித்து வருகின்றன என்பது நன்றாகப் புலப்படுகின்றது. இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியின் நிமித்தமாக இதனைச் சமாளிக்க முடியாத கையறுநிலையில் தொடர்ந்தும் இந்த சர்வதேச நாடுகள் இலங்கை மீது அவதானத்தை செலுத்தி, ஏட்டிக்குப்போட்டியாக மனிதாபிமான உதவிகள் எனவும், மீள்செலுத்தும் கடன்களாகவும் பல உதவிகளைச் செய்துவருகின்றன. தங்களின் ஏதோவொரு நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளவே இவ்வாறான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன என்பதும் உண்மை.

இவ்வாறான நடவடிக்கைகளால் இலங்கையினது புலனாய்வுக் கட்டமைப்புக்கும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் என்னவெனில் பூகோள நாடுகளின் அரசியலில் கடல்வளம் என்பது மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டியது. அண்மையில் அமெரிக்காவானது இலங்கைக்கு கப்பல் ஒன்றினையும் வழங்கியிருக்கிறது. இலங்கை கடற்படையும் உத்தியோகபூர்வமாகப் பெற்றிருக்கிறார்கள். உண்மையில் அந்தக் குறித்த கப்பலை ஏன் திடீரென இப்போது அமெரிக்கா வழங்கியது. அதில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவிகளின் தொழில்நுட்பம் மூலமாக இலங்கையும், அமெரிக்காவும் எதையெல்லாம் அவதானிக்கப்போகின்றன. அக்கப்பலின் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கையின் அதிகாரிகளுக்கு பூரண அறிவு இருக்கிறதா என்கிற பல கேள்விகள் இக்கப்பலின் வருகையின் ஊடாக எழுகின்றன.

அமெரிக்காவின் கடலோர கண்காணிப்புக் கப்பலான P627 இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இலங்கைக் கடற்பரப்பு அவர்களால் கண்காணிக்கப்படும் அல்லது இங்கிருந்து கடற்பரப்பின் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும் என்பதும் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இவ்வாறு தான் அமெரிக்க அரசு பல நாடுகளையும் தன்வசப்படுத்திக் கொண்டுள்ளது. தனது சர்வாதிகாரத்தின் மூலமாக சவுதி அரேபியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகளையும் தன்வசப்படுத்தியுள்ளது. அந்த வகையில் இலங்கையில் சீனாவின் ஆக்கிரமிப்பினை அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்கனவே அமெரிக்கா -சீனா மோதல் உச்ச மடைந்திருக்கின்ற இச்சூழலில், இந்தக் கப்பலை அவசர அவசரமாக இலங்கைக்கு வழங்கி, இலங்கைக் கடற்பரப்பில் அல்லது ஆசியக் கடற்பரப்பில் சீனாவின் செயற்பாடுகளை முழுமையாக கண்காணிக்கும் நோக்குடன் தான் இக்கப்பல் இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியா தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா அரசு தன்வசப்படுத்தியுள்ளது. அதேபோல் கொழும்புத் துறைமுகத்தின் ஒரு முனையம், போர்ட் சிற்றி என்கிற பெயரில் ஒட்டுமொத்த கொழும்பின் துறைமுகமும் இன்று சீனாவின் வலையில் விழுந்துள்ளது. தமக்குச் சாதகமான அரசை இலங்கையில் ஆட்சிக்குக் கொண்டுவருவதன் ஊடாகவே தமது ஆதிக்கத்தை தொடர்ச்சியாக இலங்கையில் நிலைநிறுத்த முடியும் என்பதை உணர்ந்து இம்மூன்று நாடுகளின் செயற்பாடுகளும் இங்கு தொடர்கின்றது. அதற்கு தம்மாலான உதவிகளை அதாவது எங்கெங்கெல்லாம் இலங்கை அரசு பலமிழந்துள்ளதோ அவ்வாறான துறைகளைக் கண்டுபிடித்து உதவிகளைச் செய்வதில் இம்மூன்று நாடுகளும் குறியாக இருப்பதைக் காணமுடிகின்றது.

இலங்கை சர்வதேச வலைப்பின்னலின் சூனியத்திற்குள் சிக்கியுள்ளது. இனப்பிரச்சினைக்கானத் தீர்வினைக் காண்கின்ற போது புலம்பெயர்ந்துவாழும் வசதிபடைத்த முதலீட்டாளர்களினால் இலங்கை தலைநிமிர வாய்ப்புக்கள் அதிகம் இருந்தும் அதனைச் செய்ய சிங்கள பௌத்த பேரினவாதிகள் தயாராகவில்லை. தமிழர்களுக்கென தனி அலகு வழங்கும் வரை இந்தப் பூகோள நாடுகளின் தாக்கத்திலிருந்து இலங்கையால் ஒருபோதும் விடுபட முடியாது. ஐ.நா மனித உரிமைப்பேரவையின் ஊடாக முன்னெடுக்கப்படும் விடயங்கள் தொடர்பில், பிரேரணைகள் தொடர்பில் இலங்கை அக்கறைகொள்வதாகத் தெரியவில்லை.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றமும் நாடுகளும் இலங்கையின் மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் கடுமையான அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இனிவரும் காலங்களில் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை பெறவேண்டுமாகவிருந்தால் கூட தமிழர்களுக்கான தீர்வுகள் வழங்கப்படவேண்டும் என்பதில் மேற்கத்தேய நாடுகள் விடாப்பிடியாக இருக்கின்றன. சர்வதேச விசாரணை என்கிற விடயம் இன்னும் உயிர்ப்புடன் தான் இருக்கிறது. இவ்வாறான நெருக்கடிகளால் இலங்கை அரசால் அவ்வளவு எளிதில் மீண்டுவிட முடியாது. உலக நாடுகள் கடன்களை வழங்கி மேலும் மேலும்



இலங்கையின் பொருளாதாரத்தை சீரழிக்குமே தவிர, இலங்கையின் வளங்கள் பறிபோகுமே தவிர ஆக்கபூர்வமான வளர்ச்சியைக் காணமுடியாது. அரசுகள் மாறினால் மாத்திரம் போதாது செயற்பாட்டு ரீதியான மாற்றங்கள் வேண்டும்.

வடக்கு - கிழக்கில் மீண்டும் மாவீரர் தினத்தினை முன்னிட்டு கெடுபிடிகள் ஆரம்பித்துள்ளதை பார்க்கிறோம். ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குக் காட்டிய பூச்சாண்டிகளை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். இன்று சிங்கள மக்களும் தெற்கு அரசியல்வாதிகளின் பூச்சாண்டிகளை நன்கு அறிந்துள்ளனர். இரவோடு இரவாக எவரது வீடும் எரிக்கப்படலாம் என்கிற நிலைதான் அங்கு இருக்கிறது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து இன்று சிங்கள மக்கள் பேசுகின்றார்கள். ஆனால் இதனை தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்து தீர்வு நோக்கி முன்கொண்டு செல்ல அவர்கள் தயாரா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி தமிழ் - முஸ்லீம் மக்களுக்குத் தீர்வினைத் தரும் என நம்பியே தமிழ் - முஸ்லீம் மக்கள், அரசில்வாதிகள் ரணிலை ஆதரித்தார்கள். ஆனால் ரணிலை நம்பினால் தலை மிஞ்சாது என்பதை உணர்ந்து இறுதியில் இன்று ரணிலை சிறுபான்மைக் கட்சிகள் கைவிட்டுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கின் ராஜபக்ச தரப்பினரை நம்பியே அவரது அரசியல் இன்று ஊசலாடிக்கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாத நிலையில் இன்றைய அரசியல் நிலைகுலைந்துள்ளது. ஜனாதிபதிக்கு எதிரான கோசங்கள் தொடர்ந்தும் தெற்கில் வலுத்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அரகல போராட்டம் மைனா கோ கம என்கிற போராட்டம் வரை வந்திருக்கிறது. போராட்டங்கள் இன்னும் ஓயவில்லை. தெற்கின் அரசியல்கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புக்கள் என இணைந்து போராட்டங்களைச் செய்கின்றனர். உலக நாடுகளும் இதனைத்தான் விரும்புகின்றன. இலங்கையில் இன்னமும் பயங்கரவாதம் இருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டேயிருந்தால் தான் அவர்கள் தத்தமது வேலைகளைச் சுமுகமாகச் செய்யமுடியும். இலங்கையிலும் இன மத தேசிய வாதக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இனவாதமே இந்த நாட்டின் எதிர்காலத்தைச் சீரழித்துள்ளது. பேசியவர்கள் ஒவ்வொருவராக காணாமல் போக தொடர்ந்தும் இனவாதம் அடுத்த தலைமுறைகளுக்கு நாசுக்காகக் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அண்மையில் வெடித்த போராட்டத்திலும் மக்கள் எதிர்ப்பினை வெளியிட்டார்கள். மீண்டும் மஹிந்த தரப்பினரை ஆட்சிக்குக் கொண்டு வரும் நோக்கில் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. பிரதான கட்சிகளின் உடைவால் அரசியல் போட்டிகள் சூடுபிடித்துள்ளன. அரசியலில் வெட்டுக்குத்துக்கள், குழிபறிப்புக்கள், கூட்டணிகள், புதிய கட்சிகள், உடைவுகள் தொடர்கின்றன. கடந்த 30 வருட அஹிம்சை மற்றும் ஆயுத ரீதியிலான போராட்டங்களின் மூலமாக தெற்கின் சிங்கள பேரினவாதிகள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. இன்னமும் பழையதையே செய்துகொண்டிருக்கின்றனர். விடுதலைப்புலிகள் இருந்தால் இலங்கைக்குள் தாம் காலடிவைக்க முடியாது என்பதை உணர்ந்த சர்வதேச நாடுகள் அவர்களை அழித்தொழிப்பதற்கான தீர்மானங்களை மேற்கொண்டார்கள். இதனாலேயே புலம்பெயர்ந்த நாடுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் இயங்கினாலும் தடைசெய்யப்பட்ட அமைப்பாகவே இருக்கிறது.

விடுதலைப்புலிகளையும் தமிழர் போராட்டங்களையும் இல்லாமல் செய்ததன் பின்னர் தான் சீனா, அமெரிக்கா, இந்தியாவினது தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கின் கடற்பரப்புக்களில் அத்துமீறல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் பூதாகரமாக வெடித்துள்ளது. அதேவேளை ஐரோப்பாவில், ஏனைய சில நாடுகளில் விடுதலைப்புலிகளின் கடந்த 10 வருட செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்கிற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தடைகளை நீக்குவது குறித்து புலம்பெயர் தமிழர்களும் சர்வதேச வல்லுனர்களும் குரல்கொடுப்பதைக் காண்கிறோம். ஆகவே தமிழர்களுக்குச் சாதகமாக சர்வதேச வலைப்பின்னல் இறுக்கமாக தமது வேலையைச் செய்கின்றது. ஆனால் இலங்கையில் தமிழர்களின் அரசியல் கட்டமைப்பு சிதைந்து காணப்படுகின்றது. இன்று இந்திய - இலங்கை வம்சாவளியினர் சர்வதேச நாடுகளில் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த சர்வதேச தலையீடுகள் இலங்கையின் பாதுகாப்புத் துறையினருக்கும் அச்சத்தையும், நெருக்குதல்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயங்களுக்கானத் தீர்வுகள் மாற்றுத்திட்டங்கள் குறித்து சிந்திக்காமல், மாறி மாறி வருகின்ற அரசுகள் வரவுசெலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கென அதிக நிதியினை ஒதுக்குவது வேடிக்கையானது. இது அரசுக்கும் - பாதுகாப்புத் துறையினரான முப்படைகளுக்கும் முறுகலையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

ஆகவே இலங்கையை எவர் ஆட்சிசெய்தாலும் மாற்றங்கள் தென்னிலங்கை சிங்கள சமூகத்திடமிருந்துவரவேண்டும். இந்தநாட்டின் பௌத்த சிந்தனை மூவின மக்களுக்காகவும், இலங்கையின் எதிர்காலத்திற்காகவும், எமது நாட்டின் வளங்களுக்காகவும், எதிர்காலச் சந்ததியினருக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் நிச்சயம் மாற்றப்பட வேண்டும் என்பது நிதர்சனமான உண்மை.

**இரணியன்**



தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## இலங்கையின் நெருக்கடியும், அரசியல்வாதிகளும்

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது எதிர்காலத்தில் இன்னும் மோசமடையலாம் என்கிற நிலையே தொடர்கின்றது. இலங்கை மக்கள் இந் நிலையினை அறிந்து இளைஞர். யுவதிகள் பணிக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கும். ஐரோப்பிய நாடுகளுக்கும் என பெருமளவில் படையெடுத்து வருவதைக் காணமுடிகின்றது. ஆனால் இவ் இக்கட்டான சூழலில் தற்போது இலங்கையை பொறுப்பெடுத்திருக்கும் ஐ.தே.க வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர் சார்ந்த சுதந்திரக்கட்சி. பொதுஜன பெரமுன உள்ளடங்கிய அரசு தொடர்பில் பொறுப்பேற்ற நாள் முதல் நாட்டின் பிரதான எதிர்க்கட்சி. சிறுபான்மைக் கட்சிகள். அநுரகுமார திசாநாயக்க என பாரபட்சம் இல்லாமல் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவி விலகலையடுத்து பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலமாக. அரசியலமைப்பின் பிரகாரமே ஜனாதிபதியானார். எதிர்த்தரப்பினரால் தேசிய அரசாங்கம் அமைத்தல் என்பது தொடர்பில் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில். இன்று வரை தேசிய அரசு என்கிற விடயம் சாத்தியப்படவில்லை. இதனைவிட அரசின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு தமது ஆதரவு உண்டு என தெரிவித்த கட்சியின் தலைமைகளும் உண்டு. நாட்டின் அத்தியாவசியப் பொருட்கள் கடுமையான விலையேற்றத்தைக் கண்டுள்ளன. மீண்டும் எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமா என்கிற அச்சம் தொடர்கின்றது. எரிவாயு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மின் துண்டிப்பு தொடர்கின்றது ஆனால் காலம் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்குமா என்றால் தெரியவில்லை. ஆக இன்னமும் இலங்கை சீராக வழமைக்குத் திரும்பவில்லை. உடனடியாகச் சாத்தியப்படாது காலம் எடுக்கும் என்பது உண்மை.

பாராளுமன்றம் ஊடாக ஒருவரை நியமித்துவிட்டு. மீண்டும் நாட்டைக் குழப்புகிற வேலையை நாட்டின் தென்னிலங்கைக் கட்சிகளும் அவர்களுடன் இணைந்து சிறுபான்மைக் கட்சிகளும் செய்கின்றனவா என்கிற கேள்வி இன்று எழுந்துள்ளது. அரகல என்கிற மக்கள் போராட்டம் நியாயமாக வெடித்தது. ஆனால் அண்மையில் நடைபெற்ற போராட்டம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. வாய்ப்புக்கள் வருகிற போது தட்டிக்கழித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்றும் தத்தமது நிகழ்ச்சிநிரலுக்கேற்ப கொள்கைகளை வகுத்துக்கொண்டு ஆட்சியிலிருக்கும் தரப்பை குறைகூறிக்கொண்டேயிருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க அவர்களை சரியானவர். இன்று சரியாகச் செய்கிறார் என்றெல்லாம் கூறவரவில்லை. ஆனால் தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி. மேலைத்தேய நாடுகளின் செல்வாக்கினைப் பெற்றுள்ள அவரால். எதிர்த்தரப்பில் உள்ளவர்களை விட சில விடயங்களையாவது ஒப்பீட்டளவில் அணுகிச் செயற்பட முடியும் என்கின்றனர் அரசியல் அவதானிகள். அதேநேரம் அவரது இராஜதந்திரம். அரசியலில் அவர் செய்த வேலைகள் தொடர்பிலும் கடுமையான விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. மக்கள் வாக்களித்துக் கொணர்ந்த ராஜபக்சக்கள் இன்று மக்களால் துரத்தியடிக்கப்பட்டு. தங்களால் இயலாத நிலையில். ரணில் அவர்களிடம் ஆட்சியை பொறுப்புக்கொடுக்கும் அளவிற்கு நிலைமை மாறியுள்ள சூழலில். ஒற்றுமையின்றி எதற்கும் உடன்பட்டு வராமல் தமது எதிர்கால அரசியலுக்காக. தாம் ஆட்சியில் அமரவேண்டும் என்பதற்காக. தனக்கான ஆதரவாளர்களை அழைத்துக்கொண்டு மீண்டும் போராடக் குதித்து. அவர்களது குழுக்களாலேயே எதிர்ப்பையும் சம்பாதித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்.

போராட்டங்கள் நாட்டில் தேவை. ஆனால் ஒட்டுமொத்த நாடும் சரிவைச் சந்தித்திருக்கும் சூழலில். தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக. கையில் எதுவித திட்டங்களும் இல்லாமல் அல்லது இருப்பதாகவிருந்தால் பொதுவெளியில் மக்கள் முன்வைக்காமல் ஆட்சியைப் பிடிப்பதற்காக. மக்களையும் அழைத்துக்கொண்டு வீதிகளில் நாடகம் போடுவதையும். அவர்களுக்கு கூஜா தூக்கும் ஆதரவுக் கட்சிகளையும். உண்மையாக ஒரு அரசுக்கும் - ஆட்சி மாற்றத்திற்கும் எதிராக ஜனநாயக ரீதியில் போராடி வெற்றி கண்ட மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

# 193 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



### விசாரணைகளை மேற்கொள்ளல்

பிரதேசக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்வதற்கென சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இதனுள் வேவு முறியடிப்புப் பிரிவினர். இராணுவக் காவற்றுறையினர் மற்றும் பொதுமக்களுக்கான காவற்றுறையினர். விசாரணையாளர்கள். மொழிப்பெயர்ப்பாளர்கள் போன்றோர் உள்ளடக்கப்படுகின்றனர்.

ரோந்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல். ஆவணங்களைச் (அடையாள அட்டைகள்) சோதனையிடல். ஊரடங்குச் சட்டம் கடைப்பிடிக்கப்படுவதைக் கண்காணித்தல். கெரில்லா வேவுக்காரர்களைப் பிடித்தல். நகரிலும் பிற மக்கள் வாழ்விடங்களிலுமுள்ள முக்கிய இடங்களைக் காவல் காத்தல் போன்ற நோக்கங்களுக்காகத் தொடர்ச்சியான ரோந்து நடவடிக்கையில் காவற்றுறையினரும் இராணுவப் பிரிவினரும் ஈடுப்படுகின்றனர். ரோந்துக் காவல் கடமைக்காக இரண்டுபேர் கொண்ட காவற்றுறை ரோந்து அணி. மோட்டார் மயமாக்கப்பட்ட மற்றும் உலங்குவானூர்திகளில் வான்வழி ரோந்து என நியமிக்கப்படுகின்றன.

பின்புலத்திலுள்ள முக்கிய இலக்குகளுக்கான காவலை ஒழுங்குபடுத்தல். முக்கிய இலக்குகளுக்கான பாதுகாப்பு. குறித்த பிரதேசத்திலுள்ள இராணுவப்பிரிவினருடன் கூட்டாகச் சேர்ந்துக் காவற்றுறையினரால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

வழக்கமாக முக்கிய இலக்குகளுக்காக காவலையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக. அவற்றைச் சுற்றி முட்கம்பி வேலி (சில வேளைகளில் சில அடுக்குகள்) அமைக்கப்படுகின்றது. சமிக்கை அமைப்புக்களும் வானொலி மின்னியல் சாதனங்கள் போன்றனவும் பொருத்தப்படுகின்றன. இலக்கிற்கு வருவதற்கு ஓரளவு சாத்தியமான பாதைகளுக்கு சமிக்கைக் கண்ணிகளும் யுத்தக் கண்ணிகளும் புதைக்கப்படுகின்றன. ரோந்துக்காரர்களும் நேரடியாகக் காவலில் ஈடுபடுகின்றவர்களும் தமது ரோந்து ஒழுங்குகள். காவல் ஒழுங்குகள். நகர்வு பாதைகள் போன்றனவற்றைத் தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். ரோந்துகளும் நேரடிக் காவல்களும் சில வேளைகளில் காவல் நாய்களாலும் பலப்படுத்தப்படுகின்றன.

போக்குவரத்துப் பாதைக்கான காவலில். அதுவும் குறிப்பாக அதிலுள்ள பலவீனமான இடங்களில் (மலையடிவாரக் கடப்புக்கள். சுரங்கப்பாதைகள். பாலங்கள். ஆற்றுக்கடவைகள். மிதவைகள். நீர் விநியோக நிலையங்கள்) கூடுதல் அக்கறை செலுத்தப்படுகின்றது.

கெரில்லா எதிர்ப்பு போராட்டம் நடைபெறுகின்ற வலயத்திலுள்ள வீதிகள் யாவும் கெரில்லாக்களின் செயற்பாட்டுத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. சிவப்பு , மஞ்சள். பச்சை ஆகியனவே அவையாகும். கெரில்லாக்களின் தீவிர செயற்ப்பாட்டு பிரதேசத்திலுள்ள பாதைகள் சிவப்பு வகைக்குள் அடங்குகின்றன. இவ்வீதிகளில் கெரில்லாக்களால் பதுங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்படும் சாத்தியங்கள் கூடுதலாக உள்ளன. இவ்வீதியால் தனியாக வாகானம் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கெரில்லா எதிர்ப்பு படைகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கூடாகச் செல்கின்ற பாதைகள் பச்சை நிறப் பிரிவக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

### கொள்கை ரீதியான நாசவேலையும் பரப்புரையும்

நேரடியான ஆயுதப் போராட்டம் ஒருபோதும் விரும்பியபலாபலன்களை தராததுடன். ஆளணி இழப்பைத் தருவதாகவும் கூடுதலான சந்தர்ப்பங்களில் உயிராபத்துக் கூடியதாகவும் இருக்கின்றது. ஆகவே தான் ஐக்கிய அமெரிக்காவின் சிறப்புப் பிரிவுகள் அரசியல் மற்றும் கொள்கைப் போரில் கூடிய அக்கறை செலுத்துகின்றன. பிரதானமாக இந்த அரசியல் மற்றும் கொள்கைப் போர். கெரில்லா அமைப்பை உட்பக்கமாகச் சிதறடிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். சிதறடிக்கச் செய்கின்ற கொள்கைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகச் சிறப்புப் பிரிவுகள் வெவ்வேறு வகையிலான முறைகளையும் ஊடகங்களையும் பயன்படுத்துகின்றன. முக்கிய முறைகளில் ஒன்றாக கொள்கை ரீதியான நாசவேலை விளங்குகின்றது. ,தனது நோக்கம் யாதெனில். கெரில்லா அமைப்பைச் சிதறடிக்கச் செய்தல். அதனது ஒற்றுமையைக் குலைத்தல். ஆயத போராட்டம் நடத்துகின்ற எதிர்ப்படைகளை ஊக்குவித்தல் அல்லது போனால் அவர்களை நடுநிலைமையாளராக்குதல் போன்றனவாகும்.

கொள்கைப் போரிலும் பரப்புரைகளிலும் பிரதான முக்கியத்துவம் வெவ்வேறு புலம்பெயர் அமைப்புகளுக்கும் குழுக்களுக்கும் தரப்படுகின்றது. எதிரியின் சிதறடிக்கும் பணியில் முக்கிய அங்கமாகக் கெரில்லா சார்பு மற்றும் எதிர்ப்பியக்க அமைப்புக்களின் பெயரைக் கெடுக்கின்ற வேலை விளங்குகின்றது.

### கெரில்லாக்களை அழிக்கின்ற சமர்ச் செயற்பாடுகள்

கெரில்லா அமைப்பு முழுவதையும் ஒடுக்குதலும் அதில் பங்கெடுக்கின்றவர்களை அழிப்பதுமே கெரில்லா எதிர்ப்புப்போரின் இறுதி இலக்காக விளங்குகின்றது. கெரில்லாக்களுக்கு எதிரான போரில் பின்வரும் வகையிலான சமர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

பதில் நடவடிக்கை தீவிர சமர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கெரில்லாப்படைப் பிரிவுகள் வழக்கமாத் தங்களது இருப்பிடத்தை காட்டித்தந்துவிடுகின்றன கெரில்லாக்களின் செயற்ப்பாட்டு பிரதேசத்தை அறிந்து கொண்டதன் பின். உடனே அவர்களுக்குக்கெதிரான படைப்பிரிவு அனுப்பப்படுகின்றது. அப்படைப்பிரிவு கெரில்லாக்களை நெருக்கி. அவர்களை அழிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்குகின்றது.

தொந்தரவு நடவடிக்கைகள் இந்த நடவடிக்கைகளின் நோக்கம் யாதெனில். கெரில்லாக்களைத் தொடர்ச்சியாக நெருக்கடி நிலைக்குள் வைத்திருத்தல். அவர்களது ஓய்வைப் பறித்தல். மீளக் குழுக்களை ஒழுங்கமைக்கும் சந்தப்பத்தையும் சமர் நடவடிக்கையை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தையும் பறித்தல் போன்றனவே ஆகும்.

தொடர்வான்....

# தமிழர்கள் தமிழ் தேசியத்தின் கீழ் அணி திரள வேண்டும், ஒற்றுமையின்மையே தமிழர்களின் வீழ்ச்சிக்கு காரணம்



'தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமிழ் தேசியத்தின் கீழ் ஒற்றுமையாக அணி திரள வேண்டும். ஒற்றுமையின்மையே தமிழர்களின் வீழ்ச்சிக்கு காரணம்..'

தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைக்கும் தமிழ் இன ஒற்றுமையே தீர்வு என்று வலியுறுத்தும் தமிழ் தேசியவாதிகள் தமக்குள் ஒற்றுமையாக இருக்கின்றனரா? தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை தவிர வேறெந்த அரசியல் கொள்கையையும் பின்பற்றி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர். தமிழர்களில் சிலர் இடதுசாரிகளாக இருப்பது கூட அவர்களுக்கு பிடிப்பதில்லை. (இதன் மூலம் தமிழ் தேசியவாதிகள் தம்மை வலதுசாரிகளாக காட்டிக் கொள்கின்றனர்.) கம்யூனிசம்.சோஷலிசம். தலித்தியம் .பெண்ணியம் என்பன எல்லாம் தமிழர்களின் ஒற்றுமையை குலைத்து விடும் என்று பதறித் துடிப்பார்கள். உண்மையில் ஒற்றுமையாக ஒன்று சேர வேண்டியவர்கள் தமிழ் தேசியவாதிகள் தான். அவர்கள் தமது தவறை மறைப்பதற்காகவே தமிழ் மக்கள் மேல் பழியைப் போடுகின்றனர்.

தமிழ் தேசியம் என்றைக்காவது தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்திருக்கிறதா? உண்மையில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக சேர்ந்து நின்ற சந்தர்ப்பங்கள் வரலாற்றில் நிறைய உண்டு. ஆனால் அப்போதெல்லாம் தமிழ் தேசியவாதிகள் தமக்குள் மோதிக் கொண்டதன் மூலம் எதிரிக்கு தமது ஒற்றுமையின்மையை பறைசாற்றிக் கொண்டார்கள். ஈழப்போர் தொடங்கிய காலத்தில் நகைச்சுவைத் துணுக்கு ஒன்று ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. 'ஸ்ரீலங்கா அரசு போராளிக் குழுக்களை அழிப்பதற்கு அதிக சிரமப் படத் தேவையில்லை. அவர்கள் கையில் தமிழீழத்தை கொடுத்து விட்டால் போதும். அதற்குப் பின்னர் தமக்குள் அடிபட்டு அழிந்து தமிழீழத்தை மீண்டும் சிங்களவனிடம் கொடுத்து விடுவார்கள்.'

தமிழ் நாட்டில் அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமே தமிழ் தேசியக் கொள்கையை முதன் முதலாக வெகுஜன மயப்படுத்தியது. அவர்கள் தான் முதன்முதலாக தனித் தமிழ்நாடு கோரிக்கையை எழுப்பினார்கள். ஆனால் திமுக கூட திராவிடர் கழகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து வெளியே வந்த கட்சி தான். அதற்கு அவர்கள் பல கொள்கை முரண்பாடுகளை கூறிக் கொண்டார்கள். பிற்காலத்தில் கருணாநிதி எம்ஜிஆருக்கு இடையிலான பிணக்கு காரணமாக அதிமுக உருவானது. தமிழர்களின் ஒற்றுமை மேலும் சிதைந்தது. அதற்குப் பின்னர் வைகோ பிரிந்து சென்றார். இந்தப் பிரிவினைகளுக்கு எந்தக் கொள்கை முரண்பாடும் காரணம் அல்ல.

இலங்கையிலும் அது தான் நிலைமை. ஆரம்பத்தில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் மட்டுமே இருந்தது. அன்றைய தமிழ்க் காங்கிரசின் அரசியலுக்கும் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்கும் இடையில் எந்த ஒற்றுமையும் கிடையாது. அரசாங்கத்தில் பதவிகளை பெற்றுக் கொள்வதும் தமிழ் மேட்டுக்குடி வர்க்க நலன்களை பராமரிப்பதுமே அன்றைய தமிழ்க் காங்கிரசின் பிரதானமான செயற்பாடுகளாக இருந்துள்ளன.

செல்வநாயகம் தலைமையில் ஒரு குழுவினர் தமிழ்க் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சி உருவாக்கினார்கள். அப்போது சில கொள்கை முரண்பாடுகள் பற்றி பேசிக் கொண்டார்கள். செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியே இன்றைய தமிழ் தேசியக் கோட்பாட்டுக்கு அஸ்திவாரம் போட்டது எனலாம். அந்தக் கட்சியே முதன் முதலாக தமிழ் மொழி பேசும் மக்கள் எல்லோரையும் ஒரே அரசியலின் கீழ் ஒன்று சேர்த்தது. சாதிய முரண்பாடுகள் கூர்மை அடைந்திருந்த அந்தக் காலங்களில் தாழ்த்தப்பட சாதியினர் பெருமளவில் இடதுசாரிக் கட்சிகளையே ஆதரித்து வந்தனர். இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு வளர்வதை தடுப்பதும் தமிழரசுக் கட்சியின் முக்கியமான நோக்கமாக இருந்துள்ளது. குறைந்தது ஒரு தசாப்த காலமாகவேனும் தமிழ்க் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் ஒற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டார்கள். தேர்தல் காலங்களில் ஒருவரை மற்றவர் திட்டித் தீர்த்தார்கள். ஆனால் காலப்போக்கில் ஒருமையின் அவசியத்தை அவர்கள் புரிந்து கொண்டார்கள். எழுபதுகளில் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய கட்சியை உருவாக்கினார்கள். அப்போது ஈழத் தமிழ் மக்கள் ஒற்றுமையாக கூட்டணியை ஆதரித்தார்கள். 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பெரும்பான்மை தமிழ் வாக்காளர்களின் பலத்தில் வென்றார்கள். சிங்களவர்களே பொறாமைப்படும் அளவிற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தின் அனைத்து ஆசனங்களையும் கைப்பற்றி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக அமர்ந்தார்கள்.

அந்த ஒற்றுமை நீண்ட காலம் நிலைக்கவில்லை. யாரும் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த சக்திகளினால் தமிழ் தேசியத்தின் ஒற்றுமை குலைக்கப் பட்டது. கொள்கை முரண்பாடு காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியினர் தீவிரவாதிகளாக மாறினார்கள். தமிழ் மாணவர் பேரவை தமிழீழ விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற குழுக்கள் ஆயுதப் போராட்டத்தை விரும்பின. மிதவாத தமிழ் தேசியவாதிகளுக்கும் தீவிரவாத தமிழ் தேசியவாதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றி இரண்டு தரப்பினரும் பகைவர்கள் ஆனார்கள். இரண்டு தரப்பினரும் தாமே உண்மையான தமிழ் தேசியவாதிகள் என்று அறிவித்துக் கொண்டனர்.

தீவிர தமிழ் தேசியவாதிகள் கைகளில் ஆயுதங்கள் இருந்ததால் மிதவாத தமிழ் தேசிய தலைவர்களை துரோகிகள் என்றழைத்து சுட்டுக் கொன்றனர். அதனால் மிதவாத தமிழ் தேசியவாதிகள் தமது பாதுகாப்பிற்காக சிங்கள அரசை சார்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். சில இடங்களில் கூட்டணித் தலைவர்கள் பிரமுகர்கள் தீவிரவாத இளைஞர்களை பொலிசிற்கு காட்டிக் கொடுத்த சம்பவங்களும் நடந்துள்ளன. மெல்ல மெல்ல ஆயுதமேந்திய குழுக்களின் ஆதிக்கம் மேலோங்கியதால் தமிழ் மக்களும் கூட்டணியை விட்டு விலகி ஆயுதபாணிக் குழுக்களை ஆதரித்தனர்.

தமிழ் தேசிய ஆயுதபாணிக் குழுக்களுக்கு இடையில் கூட ஒற்றுமை இருக்கவில்லை. பிரபாகரன் சில வருட காலம் டெலோவில் இருந்தார். பின்னர் பிரிந்து சென்று புலிகள் அமைப்பை ஸ்தாபித்தார். பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் பிரபாகரன் தலைமையிலான புலிகள் டெலோ இயக்கத்தை அழித்து விட்டனர். ஆரம்ப காலத்தில் புலிகள் இயக்க தலைவராக பதவி வகித்த உமா மகேஸ்வரன் பின்னர் பிரிந்து சென்று புளொட் என்ற இயக்கத்தை உருவாக்கினார். அதற்கு எந்தக் கொள்கை முரண்பாடும் காரணம் அல்ல. ஊர்மிளா என்ற பெண் போராளியின் மரணம் தொடர்பாக எழுந்த சர்ச்சையின் காரணமாகவே உமா மகேஸ்வரன் தலைமையில் ஒரு குழு பிரிந்து சென்றது. புளொட் இயக்கமும் ஒற்றுமையாக இயங்கவில்லை. உமா மகேஸ்வரனின் தலைமைக்கு எதிராக கிளர்ச்சி செய்த தீப்பொறி குழுவினர் பிரிந்து சென்றனர். இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் புளொட்டில் இருந்து இன்னொரு குழுவினர் பிரிந்து சென்று ஈ.என்.டி.எல்.எப். என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் கூலிப் படையாக இயங்கினார்கள். நீண்ட காலமாக புலிகள் கட்டுக்கோப்பான அமைப்பாக ஒற்றுமைக்கு பெயர் பெற்று விளங்கியது. ஆனால் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் புலிகளின் இரண்டாம் மட்ட தலைவர் மாத்தையா RAW உளவாளி என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அது ஒரு தனி மனிதனுக்கு எதிரான நடவடிக்கையாக இருக்கவில்லை. மாத்தையாவுக்கு விசுவாசமான போராளிகளும் கைது செய்யப்பட்டனர். சில நூறு பேரைக் கொண்ட மாத்தையா குழுவினர் தப்பிச் சென்று சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து கொண்டார்கள்.

நோர்வே அனுசரணையாளராக செயற்பட்ட சமாதான பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் கிழக்கு மாகாண தளபதியான கருணா தலைமையில் ஒரு குழு பிரிந்து சென்றது. இரண்டு பிரிவுகளுக்கு இடையில் நடந்த ஆயுத மோதல்கள் காரணமாக தோல்வியடைந்து பின்வாங்கிய கருணா குழுவினர் சிங்கள அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டனர். தீவிர தமிழ் தேசியவாதிகள் அரசாங்கத்துடன் சேர்வது என்பதுகளிலேயே தொடங்கி விட்டது. வடக்கு கிழக்கில் புலிகளினால் தடை செய்யப் பட்ட டெலோ புளொட் ஈபிஆர்எல்எப் ஆகிய இயக்கங்கள் தமது பாதுகாப்பிற்காக சிங்கள இராணுவத்தின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளுக்கு எதிரான போரில் அவர்களை கூலிப் படைகளாக பயன்படுத்தியது.

ஈழத் தமிழ் தேசியவாதிகள் தமக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவரை ஒருவர் கொன்று குவித்த காலத்தில் தமிழ் தேசிய ஆதரவாளர்கள் 'தமிழ் மக்களின் ஒற்றுமையின்மை' பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் போட்டியிட்ட காலத்தில் அவர்களை ஒற்றுமையாக ஆதரித்த தமிழ் மக்கள் தான் பின்னர் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் ஆதரித்தார்கள். 1995 ஆம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டை சிறிலங்காப் படைகள் கைப்பற்றின. 'யாழ்ப்பாண தமிழரின் சனத்தொகையில் மிகக் குறைந்த சதவீதமானோரே புலி இயக்கப் போராளிகளாக இருந்ததாகவும் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடி இருந்தால் சிங்களப் படைகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி இருக்கலாம் என்றும்' புலிகளின் பிரச்சாரகர்கள் தெரிவித்தனர்.

2009ல் நடந்த இறுதிப்போரில் வன்னியில் இருந்த அனைத்து தமிழ் மக்களும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து போராடினார்கள். இறுதி யுத்தம் தொடங்குவதற்கு முன்னரே வீட்டுக்கொரு பிள்ளை போராளியாக வேண்டும் என்று உத்தரவிட்ட புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டனர். பல குடும்பங்களில் பிள்ளைகள் பலவந்தமாக பிடித்துச் சென்று போராளிகளாக்கப்பட்டதை இன்றைக்கும் புலி ஆதரவாளர்கள் மறுத்து வருகின்றனர். 'வன்னியில் வாழ்ந்த தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக தாமாகவே விரும்பிச் சென்றனர்.' என்றே சொல்லி வருகினறனர். அப்படியானால் தமிழ் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து தான் போராடி இருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக சேர்ந்து போராடிய போதிலும் போரில் ஏற்பட்ட தோல்வி எங்கிருந்து வந்தது? அதற்கு கருணா குழு ஈபிடிபி போன்ற அரச அடிவருடிகளான தமிழ் கூலிப் படையினரை குற்றஞ் சாட்டுகின்றனர். அவர்கள் எல்லோரும் முன்னொரு காலத்தில் தமிழ் தேசியவாதிகளாக இருந்தவர்கள். அதாவது தமிழ் மக்கள் என்றைக்கும் ஒற்றுமையாகத் தான் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினைகள் இருக்கவில்லை. ஆனால் தமிழ் தேசியவாதிகளுக்கு இடையில் தான் ஒற்றுமை இல்லை. அது தான் முக்கியமான பிரச்சினை.

புலிகளுக்குப் பின்னர் தமிழ் தேசியவாதிகளின் ஓரேயொரு நம்பிக்கை நட்சத்திரமாக கருதப்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒற்றுமை இல்லை என்பதை இங்கே சொல்லத் தேவை இல்லை. கூட்டமைப்பு என்பது பல கட்சிகளின் சேர்க்கை. வட மாகாண சபைத் தேர்தலில் தமிழர் ஒற்றுமையின் முக்கியத்துவம் பற்றி பேசி வாக்குக் கேட்டார்கள். அறுதிப் பெரும்பான்மை தருமாறு கெஞ்சினார்கள். தமிழ் மக்களும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து கூட்டமைப்புக்கு தமது ஓட்டுக்களை அள்ளிக் கொடுத்தார்கள். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் மாகாண சபை அரசாங்கம் அமைப்பது தொடர்பாக இழுபறிப் படுகிறார்கள். அமைச்சர் பதவிக்காக சண்டை போடுகிறார்கள். உண்மையில் தமிழ் தேசியவாதிகள் எமக்கு போதிப்பதற்கு மாறாகவே யதார்த்த நிலைமை உள்ளது. தமிழ் மக்கள் ஒற்றுமையாகத் தான் இருக்கின்றனர். ஆனால் தமிழ் தேசியவாதிகளுக்குள் தான் ஒற்றுமை இல்லை.

புலிகளின் அழிவுக்குப் பின்னர் அதே அரசியலை வேறொரு தளத்தில் முன்னெடுத்து வரும் தமிழ்நாட்டு தமிழ் தேசியவாதிகளும் ஒற்றுமை இல்லாமல் பிரிந்து நிற்கின்றனர். ஈழப்போர் நடந்த காலத்தில் தமிழ் தேசியம் தமது உயிர்மூச்சு என்று பேசிக் கொண்டிருந்த வைகோ ராமதாஸ் திருமாவளவன் நெடுமாறன் ஆகியோர் ஆளுக்கொரு கட்சிகளாக பிரிந்து நிற்கின்றனர். 'அவர்கள் ஏன் இன்று வரையில் ஒரே கட்சிக் கொடியின் கீழ் ஒன்று சேரக் கூடாது?' என்ற கேள்வியை யாரும் கேட்கவில்லை. தேர்தலில் போட்டியிடாத தீவிர தமிழ் தேசிய அமைப்புக்களான நாம் தமிழர் மே 17 போன்றன கூட ஒரே பெயரில் ஒரே அமைப்பாக இயங்குவது பற்றி இன்று வரையில் ஆலோசிக்கவில்லை. ஆனால் எல்லோரும் ஒரே குரலில் ஒரே கோஷத்தை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். **'தமிழர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அதுவே பிரச்சினைகளுக்கு காரணம்.'** தமிழ் மக்களை குற்றம் குறை கூறுபவர்கள் ஒரு தடவை தங்களைத் தாங்களே சுய விமர்சனம் செய்து கொள்வது நல்லது.

**இரணியன்**

# தனது கட்சியைப் பலப்படுத்த காய்நகர்த்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இலங்கையின் 8வது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மக்களின் தெரிவின் மூலம் அல்லாமல் பாராளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக கோட்டாபய ராஜபக்ச அவர்களின் பதவி இராஜினாமாவையடுத்து பொறுப்பேற்றுக்கொண்ட இலங்கையின் நீண்டகால அனுபவ அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தொடர்பில் உள்நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் வரவேற்பு இருந்தாலும், கடும் எதிர்ப்புக்களும் இல்லாமலில்லை. குறிப்பாக அவரது தாய்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே பெரும்பாலான உறுப்பினர்களின் எதிர்ப்பும் அவருக்கு இருந்ததால் தேர்தல் தோல்விகளும், தலைமைத்துவப் போட்டிகளும் விடாமல் துரத்தியது. இந்நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களான தமிழ் - முஸ்லீம் மக்கள் இவர் மீது அதிருப்தியிலேயே அன்று முதல் இன்று வரை உள்ளனர். 1946 செப்டம்பர் 06 ஆம் திகதியே டி.எஸ்.சேனாநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி உதயமானது. 1947 இல் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் அக்கட்சியே வெற்றிபெற்று அரியணையேறியது. இன்று சுமார் 27 ஆண்டுகளுக்கு பிறகு, இக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் நிலையில், ஐக்கிய தேசியக்கட்சிக்கு வருடாந்த மாநாட்டை கொண்டாடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. தொடர்ந்தும் தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவே நீடிக்கவுள்ளார். அவர் ஐ.தே.கவின் தலைமைப்பதவியை 1994இல் ஏற்றிருந்தார்.

இலங்கையின் அரசியலில் ரணில் விக்கிரமிங்கவுக்கும் அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இருக்கும் பிணைப்பு என்பது அவருடன் இரத்தத்தில் கலந்தது. கட்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படக்கூடிய ஒருவராக தென்னிலங்கை அரசியலில் பேசப்படும் ஒருவர் தான் இந்த ரணில் விக்கிரமசிங்க. மாறி மாறி ஆட்சிக்குவரும் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அல்லது தாம் பதவி வகித்த ஒவ்வொரு காலகட்டத்திலும் தனது கட்சிக்காரர்களை, கட்சியை பலப்படுத்தும் வேலைத்திட்டங்களில் முழுமையாக ஈடுபட்டு வரும் ஒரு நபராக அறியப்படுகிறார் ரணில்.

கட்சித் தலைமைப் பதவிக்கு பல வழிகளிலும் போட்டிகளும் எதிர்ப்புக்களும் எழும்பிய போதெல்லாம், பல தோல்விகளைக் கண்டபோதெல்லாம் துவண்டுவிடாமல், தனக்கு நாட்டின் உயர் பதவிகளில் ஆசையில்லை கட்சியின் தலைவராக தானே மரணிக்கும்வரை தொடரவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்து இன்று சாதித்தும் காட்டியிருக்கின்றார். ஒரு காலத்தில் மிகப் பலமான கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, பின்னாளில் நல்லாட்சி என்கிற போர்வையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியில் கைகோர்த்து, பின் ஜனாதிபதி பொதுவேட்பாளர் தெரிவில் குளறுபடிகளைச் சந்தித்து, சஜித் தலைமையிலான மிகப்பெரிய உடைவைச் சந்தித்து, இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்தது. பல உறுப்பினர்கள் கட்சியைவிட்டு வெளியேறினர். அப்போதும் ரணில் அவர்களே கட்சியின் தலைவர். ஒரேயொரு தேசியப்பட்டியலை கைவசம் வைத்துக்கொண்டு யாரை பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்து அனுப்புவது என்பதில் ஒரு வருடம் காலதாமதம் செய்த கட்சியாக திகழ்ந்தது. அக்கட்சி ஏகமனதாகத் தீர்மானித்து பாராளுமன்றம் வந்தவர் தான் அக்கட்சியின் தலைவரான ரணில் அவர்கள். பலமிழந்து போயுள்ள தனது கட்சிக்கு உயிர்கொடுக்க தன்னாலானதைச் செய்வேன் என கங்கணம் கட்டிக்கொண்டு அரசையும் விமர்சித்துக்கொண்டு, நாட்டின் சூழலையும் ஆட்சியாளர்களின் போக்கையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, உரிய நேரத்தில் பேச்சுக்களை மேற்கொண்டு, சர்வதேச ரீதியாகவும் தனக்கிருக்கும் செல்வாக்கினை பயன்படுத்திக்கொண்டு,



சத்தமில்லாமல் ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலமாக நாட்டின் ஜனாதிபதியானார் ரணில். **கங்கிரக்கிற்குப் பேர் போன ரணில் அவர்கள், மிகக் கச்சிதமாக புதிதாக சுதந்திரக் கட்சியில் இருந்து பலம் பொருந்திய கட்சியாக உருவெடுக்க ராஜபக்ச சகோதரர்களின் மொட்டுக் கட்சியை தன்னிடம் அடிபணியவும் வைத்துள்ளார்.** மீண்டும் இந்த நாட்டில் ஐக்கிய தேசிக் கட்சி தலைமையிலான ஒரு அரசை அமைப்பதை நோக்கமாகக் கொண்டே தனது காய்களை மெதுவாக நகர்த்திவந்தார் ரணில். சந்தர்ப்பம் வரும் என்பது அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. சுதந்திரக்கட்சியாக ஓரணியில் இருந்த அணியினர் பின்னாளில் பிளவுண்டு மஹிந்த ராஜபக்சவுடன் மொட்டு சின்னத்தில் பொதுஜன பெரமுனவாக கைகோர்த்தமையும், மைத்திரி தலைமையில் ஒரு அணி பிரிந்துசென்றமையும் ஜனாதிபதி ரணில் அவர்களுக்கு ஏற்கனவே பிளவடைந்துள்ள தனது கட்சியை மீண்டும் இலங்கை அரசியலில் தூக்கி நிறுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. ஏற்கனவே மைத்திரி-ரணில் நல்லாட்சியை சுதந்திரக்கட்சியினரில் பலர் எதிர்க்காமலும் இருக்கவில்லை.

மிகவேகமாக இலங்கையின் அரசியலில் கோலோச்சிய மொட்டு தரப்பினர் வந்த வேகத்திற்குள்ளேயே பள்ளத்திற்குள் தென்னிலங்கை மக்களால் தள்ளப்பட்டுள்ளனர். வெளியில் தலைகாட்ட முடியாத அளவிற்கு இக்கட்சியினர் மீது மக்கள் கோபமடைந்துள்ளனர். ராஜபக்சக்களை பாதுகாக்கும் காவலனாக வலம்வரும் ரணில் அவர்கள், மொட்டுக் கட்சியின் செயற்பாடுகளை முடக்கி, ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தி உள்ளூராட்சிகளுக்கானத் தேர்தலை நடத்தி மீண்டும் தான் ஜனாதிபதியாகலாம் என்கிற கனவுடன் கருத்துக்களை வெளியிடுவதைக் காணமுடிகிறது. யாராலும் இயலாததை பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் தான் செய்து முடித்ததாக உலக நாடுகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார் ஜனாதிபதி ரணில்.

பதவி மோகத்தில் எதிர்த்தரப்பினராகிய ஐக்கிய மக்கள் சக்தி தம்முடன் சிறுபான்மைக் கட்சிகளையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு இன்றைய அரசாங்கத்திற்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. சஜித் அணியினருக்குள் தற்போது முரண்பாடுகளும் எழுந்துள்ளது. ரணில் அவர்களின் ஐக்கிய தேசிக் கட்சியின் பக்கம் தாவ பலர் தயாராகி வருகின்றனர் எனவும் அறிய முடிகிறது. பலமிழந்துள்ள எதிர்க்கட்சியை நம்பி சிறுபான்மைக் கட்சிகள் களத்தில் இறங்கியிருப்பதால் தமிழ் மக்களுக்கு பயன் ஏதுமில்லை. அதற்காக ரணில் விக்கிரமசிங்க பக்கமோ அல்லது ராஜபக்ச தரப்பினருடனோ கைகோர்க்க வேண்டும் என்பதாக அர்த்தமாகாது. தமது கட்சியை வளர்க்க எம்மைப் பயன்படுத்துவார்களே தவிர, தீர்வு எதுவும் இவர்களால் எமக்குக் கிடைக்காது. இன்று மஹிந்த தரப்பினருடன் இணைந்திருந்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களையும் ரணில் உடைத்தெறிந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீது மக்கள் அதிருப்தியடைந்து போராட்டங்களை ஆரம்பித்தபோது, ரணில் அவர்களின் பலம் மெதுமெதுவாக வெளித்தெரிய ஆரம்பித்ததை அவதானிக்க முடிந்தது. நாசுக்காக விடயங்களைக் கையாண்டு தனது கட்சியின் வளர்ச்சிக்காக கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

தேசியப்பட்டியல் ஊடாக ஒருவராக நுழைந்து இன்று இருவராகியுள்ளனர். இன்றைய அரசில் கூட்டு இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி தான் பிரதான பங்கினை வகிக்கின்றது என்பது உண்மை. தனக்கு அருகில் ஆலோசகர்களாக உதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியினரையே வைத்துக்கொண்டுள்ளார். மீண்டும் தனது கட்சியைப் பலப்படுத்த கிராமங்களை நோக்கி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அழிவடைந்த நிலையில் இருக்கும் விவசாயம் தொடர்பில் பேச ஆரம்பித்துள்ளார். நாட்டை நோக்கி வெளிநாட்டு நிறுவனங்களின் பார்வை, சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பன ஆரம்பமாகியுள்ளன. நாலா பக்கமும் கதவுகள் திறக்கப்பட்டு நாட்டிலுள்ள எவரும் வெளிநாட்டிற்குச் சென்று பணிபுரிவதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளார். இவையனைத்தும் தான் வாழும் காலத்திலே மீண்டும் தனது கட்சியை தூக்கி நிறுத்தவேண்டும் என்கிற ஒற்றை விடயத்துக்காகத்தான்.

மொட்டுக் கட்சியினரின் வாயை அடைப்பதற்காகவும், அவர்களை அரசியலில் இருந்து ஓரங்கட்டவேண்டும் என்கிற நோக்கோடும் நேரடியாக சிலரைப் பழிவாங்கவே, இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருப்பவர்களுக்கான அரசியல் பிரவேசம் இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு அப்பால் எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்ட இரு திருத்தங்களை உள்வாங்க இணங்கியதாகவும், அரசியலமைப்பு பேரவைக்கான 3 சிவில் பிரதிநிதிகள் நியமனத்தின்போது பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கப்பாட்டுடன், நடுநிலையானவர்களை நியமித்தல், பாதுகாப்பு அமைச்சை தவிர ஜனாதிபதி வேறு அமைச்சு பதவிகளை வகிக்காதிருத்தல் என்பனவே அந்த இரு திருத்தங்களாகும். இவற்றைதவிர வேறு திருத்தங்களை உள்வாங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்திருக்கவில்லை. அதேவேளை, ஜனாதிபதியால் நான்கரை வருடங்களுக்கு பிறகே நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற சரத்து 19ஆவது திருத்தச்சட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டது. எனினும், 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக அது இரண்டரை வருடங்களாக குறைக்கப்பட்டது. இரண்டரை வருடங்கள் என்ற காலவரையறைக்கு எதிரணி தரப்பில் இருந்தும் எதிர்ப்பு இல்லை. அதனால்தான் 22 இல் அந்த கால எல்லை விவகாரத்தில் கைவைக்கவில்லை.

அத்துடன், இரட்டை குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு தடை விதிக்கும் யோசனையை மாற்ற அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து அது அமுலுக்கு வரும். இரட்டைக் குடியுரிமையை நீக்குவதற்கு ஒரு சில எம்.பிக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அதற்கு அரசாங்கம் உடன்படவில்லை எனவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், 22 வது திருத்தச்சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே பார்க்கப்படுகின்றது. கடந்த காலத்தில் ஜனாதிபதி ரணில் அவர்களுடன் நெருக்கமான பலர் இன்று அரசில் உள்ளனர்.

எவ்வாறு தனது பலத்தை நிரூபிக்க, ஐக்கிய தேசியக் கட்சியை வளர்க்க கடந்த காலங்களில் யுத்தம் - தமிழ் மக்களை ரணில் அவர்கள் பயன்படுத்தினாரோ, அதேபோல் மீண்டும் இன்று பிளவடைந்துள்ள தனது தாய் வீட்டைப் புனரமைக்க தன்னுடைய வீட்டையும் இழந்து துணிந்துள்ளார் என்பதே உண்மை. தனக்கென தனது கட்சிக்கென கொள்கைகளை வகுத்துக்கொண்டு செயற்படும் ஒருவராக மாறியிருக்கிறார் ரணில். யார் பேச்சையும் கேட்கும் அளவில் அவர் இல்லை என்றே அவதானிகள் கூறுகின்றனர். இலங்கையின் அரசியலமைப்பையும் சரி, இந்த நாட்டின் அரசியல் போக்குகளையும், சர்வதேச சமூகங்களின் நிலைப்பாடுகளையும், நன்கு அறிந்துவைத்திருக்கக்கூடிய ஒருவராக, இலங்கை அரசியலின் நெளிவு சுழிவுகளுக்கு ஏற்ப அனுசரித்து பொறுமையாக காரியங்களை கச்சிதமாக முன்னகர்த்தும் ஒருவராக ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகள் இருப்பதாகவும் அவருக்கு ஆதரவானவர்கள் கூறுகின்றனர். இன்று இலங்கையின் அனைத்துப் பிரதான எதிர்க்கட்சிகளும் எதிர்க்கும் ஒரு நபராக இருந்தாலும், தான் எடுத்துக்கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக பயணிப்பதையும், அரசுக்கெதிரான போராட்டங்கள் வலுப்பெற்றபோது அதனை அடக்கிய விதத்தையும் இறுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதே பழியைப் போட்டு அனைத்தையும் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி முப்படையினரின் துணையுடன் நடத்திக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ள இலங்கையை சீரமைப்பதில் கடந்த அரசான கோட்டாபய ராஜபக்ச தவறவிட்டதன் காரணமாக அரியணையை இழக்க நேரிட்டது. 69 இலட்சம் மக்களது வாக்குகளைப் பெற்று உச்சத்தில் இருந்த ராஜபக்சக்களை தென்னிலங்கை மக்களே வீதியில் தூக்கியெறிந்தபோது, தானும் மக்களுக்காக குரல்கொடுத்து நின்றதையும், ஒரு பக்கம் ராஜபக்சக்களுக்கு தனது எதிர்ப்பினையும் மறுபக்கம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டுள்ளார் ஜனாதிபதி ரணில். விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் மக்கள் அதிக கோபடைந்திருந்த நிலையில், எரிபொருளுக்காகவும் எரிவாயுவுக்காகவும் வீதிகளில் பல நாட்களாக தங்கியிருந்தபோதிலும், உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடும், மின்துண்டிப்பும், வேலைவாய்ப்பின்மையும் உச்சமடைந்திருந்த இறுக்கமான சூழலில், பொறுப்பேற்ற இச்சிறிய காலப்பகுதிக்குள்ளேயே ஓரளவு மக்கள் தலைநிமிர உடனடியான திட்டமிடல்களுடன் சில மாற்றங்களைச் செய்து, மீண்டும் மக்கள் மனதில் இடம்பிடித்து அரியணையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் நிலைக்க மிகத் தீவிரமாக அதேவேளை உன்னிப்பாகவும் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

க.சசிகரன்

# தமிழீழ விடுதலைப்புலிகளும், பயங்கரவாதத் தடைச்சட்டமும்



உலக வரலாற்றில் தமக்கான ஒரு இடத்தை தக்கவைத்துக்கொண்ட தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இலங்கையில் இன்னமும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் மீதான இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழ்த் தரப்புக்களோ ஈடுபடவில்லை என்பதே இன்றைய நிலைப்பாடு.

சர்வாதிகார நாடுகள் இலங்கை தேசத்திற்குள் கால்பதித்து தமது நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் இந்த நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அந்நிய சக்திகள் இந்த நாட்டுக்குள் தமது காலணித்துவத்தை கொண்டுவர முடியாமல் போனது. குறிப்பாக 30 ஆண்டுகள் வடகிழக்கை தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது மட்டுமல்லாது கடல், வான், தரை என்று 58 கட்டமைப்புக்களை தமது வசம் வைத்திருந்தனர். அதனூடாக நீதி நிர்வாகத் துறையும் சமமாகவே செயற்பட்டது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பூகோள அரசியலை எடுத்துக்கொண்டால் மிகவும் ஒரு குழப்பகரமான நிலைப்பாட்டையே நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளை 45 நாடுகள் தடை செய்திருந்தன. அதிலும் குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்காவினுடைய தடை என்பது விடுதலைப்புலிகளினுடைய அரசியல் மீள் உருவாக்கத்திற்கு பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியது. அமெரிக்காவின் பெண்டகனில் செப்டம்பர் 11இல் இடம்பெற்ற இரட்டை கோபுரத்தாக்குதல் என்பது உலகத்தில் இருக்கக்கூடிய ஆயுத போராட்ட குழுக்களை ஒரு தீவிரவாதமாகவே கணிப்பிட்டு குறித்த நாடுகளின் உதவியோடு அவற்றை அமெரிக்கா தடை செய்தது.

இதில் ஹமாஸ், லக்சரிதொய்பா, பலஸ்தீன விடுதலை இயக்கம், அல்-கைதா, தமிழீழ விடுதலைப்புலிகள் என 38 புரட்சி அமைப்புக்கள் தடை செய்யப்பட்டது. இத்தனை புரட்சி அமைப்புகளிலும் முதன்மை தாங்கிய அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர். இத்தனை அமைப்புகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய கோரிக்கை என்பது தமிழ் மக்களுக்கான வடகிழக்கிணைந்த ஒரு தாயகம் என்பதேயாகும். அந்த தாயகத்திற்கான போராட்டமே இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டு காலமாக இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளோடு ஆயுதம் ஏந்தி போராடிய அல்லது அக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்ட ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி போன்ற ஆயுதக் குழுக்களுக்கு இந்த நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் இல்லை. அவர்களுடைய நினைவு தினங்கள் எந்தவித தடையுமின்றி இடம்பெறுகிறது. ஆனால் விடுதலைப்புலிகளில் போராடி இறந்தவர்களுக்கு நினைவு கூறக்கூடாது என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. உதாரணமாக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரிழந்த தியாகி திலீபன் அவர்களை நினைவு கூறக்கூடாது என்று நீதிமன்றத்தினூடாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அந்த நினைவு தினம் கைவிடப்பட்டது. இருந்தும் மறைமுகமாக தியாகி திலீபனுடைய நினைவு தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய தொரு பிரச்சினைகளைத் தோற்று வித்துள்ளது. இதுவரையில் இந்த மண் மீட்கும் போராட்டத்தில் 50 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் வீரர்கள் வித்தாகியுள்ளார்கள். 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் அவர்களுடைய தியாகங்களை எவருமே அனுசரிக்கக்கூடாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது இந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்றதொன்று இருப்பதே பிரதானமான காரணமாகும். தமிழ்த் தரப்பில் இருக்கக்கூடிய சட்டத்தரணிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு சட்டத்தரணிகள் அந்தந்த நாட்டு நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அதற்கான வாத, பிரதிவாதங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிலொரு கட்டமாக பிரித்தானிய நீதிமன்றம் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியுள்ளது. அவர்கள் சுதந்திரமாக தமது அரசியல் நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்வதற்கு அனைத்து வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் ஏனைய இயக்கங்களை போன்று ஏனைய நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளில் உள்ளவர்களைப் போன்றவர்கள் அல்ல. ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள். இதுவரையிலும் விடுதலைப் புலிகளுடன் சர்வதேச ரீதியாக 7 பேச்சுவார்த்தைகளும், 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் உலகில் அதிகாரமிக்க அனைத்து நாடுகளும் தொடர்புபட்டிருக்கின்றது என்பது தான் மிக முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.




ஆகவே இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை, பயங்கரவாதத் தடையை நீக்குவதற்குத் தேவையான கடமைகளைச் செய்ய தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் முன்வர வேண்டும். இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் அவ்வாறானதொரு வழக்கை தாக்கல் செய்வதனூடாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இத்தடையை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் ஒரு செயற்பாடு இந்த நாட்டில் உருவாக்கப்படும்.

சர்வதேச நாடுகளினுடைய அழுத்தங்களில் இருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் (குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, சீனா) இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீள் உருவாக்கம் அவசியமாகிறது. சர்வாதிகார நாடுகளின் பிடியிலிருந்து இலங்கை மீட்சிபெற வேண்டுமாக இருந்தால் விடுதலைப் புலிகளினுடைய தந்திரோபாயங்கள் இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லாது போனால் சீன ஆதிக்கத்தை, இந்திய ஆதிக்கத்தை, அமெரிக்க ஆதிக்கத்தை இந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்க முடியாமல் போகும். கடந்த காலங்களை விட தற்போது இந்நாட்டில் இவ் நாடுகளின் செல்வாக்கு இன்னுமின்னும் அதிகரித்திருக்கிறது. இலங்கை அரசு சர்வதேச நாடுகளின் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

தமிழினத்தின் மீது இனப்படுகொலை மேற்கொள்வதற்கு மேற்குறிப்பிடப்பட்ட 3 நாடுகளும் ஆயுத ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தார்கள். அதற்கு மாற்றீடாகவே இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளுடன் கைகோர்த்துச் செயற்படுகிறது. தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையினூடாக, சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக இந்த ஆயுதப் போராட்டத்தை மழுங்கடித்தார்கள். அதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆகவே தமிழினம் இன்னமும் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாத சூழ்நிலை இந்த அரசாங்கத்தினாலும் உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கள மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, கரையோரச் சிங்களவர்களின் குடியேற்றம் போன்ற நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாற்றுத்திருமணம் என்ற போர்வையிலும், இராணுவப் படையணியில் சேர்க்கின்ற போர்வையிலும் தமிழ் மக்களை மீண்டும் ஒரு அடிமைத்தனத்திற்குள் இந்த இலங்கை அரசு கொண்டு செல்ல முயற்சிக்கின்றது. அதற்கான அனைத்து இரகசியத் திட்டங்களும் தமிழினத்தை வைத்தே தமிழினத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பா.உ அங்கஜன், கருணா, பா.உ பிள்ளையான் போன்றவர்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களுடைய தன்மானத்தை விற்றுப்பிழைக்கின்ற செயல் வடிவம் உருவாக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தமிழீழ கோரிக்கையை தமிழ் மக்கள் மறந்தவர்கள் என்னும் கூறியிருந்தார். அவர் கூறியதைப்போல தமிழ் மக்கள் மறந்து விடுவதற்கு முட்டாள்கள் கிடையாது.

ஆகவே இவர்களுடைய நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் தமிழ் மக்களுடைய தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற நிலைப்பாட்டில் இருந்து தமிழினத்தை பிரிக்கின்ற ஒரு செயற்பாடாகவே அமையப்பெற்றிருக்கின்றது. ஆகவே தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்காகவே எமது அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கூறுகின்ற தமிழ் அரசியல் தலைமைகள், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே தமிழீழ விடுதலைப்புலிகளை ஒருங்கிணைப்புச் செய்து, அரசியல் நீரோட்டத்திற்குள் ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக மீண்டும் உருவாக்கி, தமிழ் மக்களுக்கானத் தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் தொடர்ந்தும் ஒரு அடிமை இனமாக தமிழினம் வாழக்கூடிய சூழல் இந்த நாட்டில் உருவாக்கப்படும்.

ஆகவே சட்டத்தரணிகளே! சட்ட ஆலோசனையாளர்களே! பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான நீதி, நியாயம் கிடைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் என்பதையே நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

**நெற்றிபொறியன்**

# பாதுகாக்கப்பட வேண்டிய பெண்ணியம்



பெண்களின் உரிமைகள் என்பது அனைத்து வயதிலுமுள்ள பெண்கள், குழந்தை அனைவருக்குமான உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிக்கிறது. இந்த உரிமைகள் நிறுவனப்படுத்தப்படாது இருக்கலாம். சட்டம் , உள்ளூர் பழக்கங்கள், சமூகக் கட்டுப்பாடுகளால் தவிர்க்கப்பட்டோ மறுக்கப்பட்டோ இருக்கலாம். இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் ஆண்களை உள்ளடக்கிய மனித உரிமைகளின் விரிவான வரைவிலக்கணங்களிலிருந்து பிரித்து தனியே தொகுப்பது தேவையாகிறது. ஆண்களுக்கு இயல்பாக கொடுக்கப்படும் உரிமைகள் கூட பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன. தன்னார்வலர்கள் சமூகத்தினால் பெண்களின் உரிமைகள் காலம் காலமாகவே புறக்கணிக்கப்பட்டு வருவதையும் பெண்கள் இந்த உரிமைகளைப் பெற ஓர் எதிர் சாய்நிலை அமைந்துள்ளதையும் சுட்டுகின்றனர். பெண்களின் உரிமைகள் என்பது பாலியல் வன்முறைகளிலிருந்து விடுபடுதல், வாக்குரிமை, பொது நிறுவனங்களில் வேலை செய்தல், குடும்ப உறவில் பெண்களின் உரிமை, சமமான ஊதியம் அல்லது சரியான ஊதியம் பெறுவது, குழந்தை பிறப்பு உரிமைகள், சொத்துரிமை, கல்வி உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

இருபத்தோராம் நூற்றாண்டில் அபிவிருத்தி, சமத்தும், சாதனைகள் என்று உலகளாவிய ரீதியில் முன்னேற்றங்களையும் மேம்பாடுகளையும் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நாம் இன்னும் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளில் முழுமையான தீர்வை எட்டவில்லை என்பதே நிதர்சனம். குறிப்பாக இலங்கையானது பெண்களைப் பொறுத்தவரையிலும் பெண்களுக்கான அபிவிருத்தி வீச்சிற்குள் இருக்கின்ற பல நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சமூக அளவில் பெண்கள் பொருளாதார ரீதியாக வினைத் திறன் அற்றவர்களாகவும், பலவீன மானவர்களுமாகவே சித்தரிக்கப்படும் எண்ணப்பாங்கு நிலவி வருகிறது. தினம்தோறும் பெண்களுடைய வாழ்வு வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் பல வெவ்வேறுபட்ட சவால்களுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இன்று பரவலாக பெண்விடுதலை மற்றும் பெண்ணுரிமை குறித்து பேசப்பட்ட போதிலும் அது அறிவுபூர்வமான மற்றும் அனைத்து வகைகளிலும் தெளிவான அம்சமாக அடிமட்ட மக்கள் மத்தியில் சென்றடையவில்லை என்றே குறிப்பிடமுடியும். பெண்களுக்கான பல ஜனநாயக உரிமைகளான கல்வி, தொழில் வாய்ப்பு, வாக்குரிமை போன்றவை ஆசியாவிலேயே உயர்ந்த அளவில் இலங்கையில் காணப்படுகின்ற போதிலும் இன்னும் பலதரப்பட்ட பிரச்சினைகள் இருந்து கொண்டே தான் இருக்கின்றன. பெண்ணொருவர் குறிப்பிட்ட வயதுப் பருவத்தில் தான் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர் என்ற பிறழ்வான எண்ணக்கரு பரவலாக நிலவி வருகிறது. ஆயினும் ஒவ்வொரு வயதுக்குழுக்களிலுமுள்ள பெண்கள் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளை சந்திக்க வேண்டி உள்ளது. அதனடிப்படையில் ஆராய்ந்த உலக சுகாதார அமைப்பினது அறிக்கையின் படி (WHO), பொதுவாக பெண்கள் தத்தமது வாழ்நாளில் ஐவகைப்பட்ட நிலைகளில் வெவ்வேறு இடர்களை எதிர்கொள்கின்றனர்.

**01) பிறப்பிற்கு முன்னர் சந்திக்கும் பிரச்சனைகள்**

**02) மழலைப் பருவத்தின் துஷ்பிரயோகங்கள்**

**03) சிறுமியர் பருவ இடர்கள்**

**04) வளர்சிதை மாற்றம் மற்றும் வயது வந்தோர் பிரச்சினைகள்**

**05) முதியோர் பருவ வன்முறைகள்**

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இந்தியாவில் 2016-ம் ஆண்டின் கணிப்புப்படி நாடளாவிய அளவில் 3 லட்சத்து 38 ஆயிரத்து 954 குற்றங்கள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளன. இலங்கையை எடுத்துக்கொண்டால் ஏராளமான குற்றங்கள் இன்னமும் பதிவு செய்யப்படாதவையாக இருத்தலே கவலைக்குரியது. இவ்வாறு ஏற்படும் வன்முறைகளை பல விரிந்த கோணங்களில் அணுக இயலும். 'தனிநபர் மற்றும் குழுக்களால் ஏற்படும் வன்முறைகள்", 'அரசுகளால் நிகழ்த்தப்படும் வன்முறைகளும்' அடங்கும். உலகளாவிய ரீதியில் மூன்று பெண்களில் ஒருவர் தனது வாழ்நாளில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அடிக்கப்பட்டோ, பாலியல் புணர்விற்கு வற்புறுத்தப்பட்டோ, பிறவகையிலோ வன்முறைக்கு ஆளாக்கப்பட்டோ நிர்பந்திக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக பெரும்பாலான வன்முறைகள் எதிர்கொள்பவர் பெண் என்பதனால் மட்டுமே அவருடைய பால்நிலை அடையாளத்தை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

பெண் சிசுக் கொலை, கல்வி மறுத்தல், வரதட்சணை கொடுமை, வன்கல்வி, குடும்ப வன்முறை, பாலின துன்புறுத்தல், கருத்தடுப்பு முறைகளின் கட்டாயப் பயன்பாடு, பால் தெரிவு கருக்கலைப்பு, மகப்பேறு வன்முறை மற்றும் சமூக நம்பிக்கைகளின் அடிப்படையிலான கௌரவக் கொலை, வரதட்சிணை மரணம், பெண் உறுப்பு சிதைப்பு, கடத்துதல், கட்டாயக் திருமணம் ஆகியவற்றை ஒரு பெண் தனித்தனியாக எதிர்கொள்ளும் வன்முறைகளாக குறிப்பிடலாம். பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்வதற்கு பிரதான காரணமாக சமூக அமைப்பு இருக்கின்ற போதிலும், நுணுக்கமாக ஆராய்ந்தால், பெண்களே அவர்களுக்கு எதிரியாக உள்ளனர். முதலில் பெண்கள் தாங்களும் இச்சமூகத்தின் சமத்துவமான பிரிவினர் என்றும் பால்நிலை அடையாளங்கள் மற்றும் பிரிவினைகளில் இருந்து விடுபட மன உறுதியும் கொள்ளுதல் வேண்டும். பல்வேறான குடும்பங்களில் சமூக அமைப்பின் திணிப்புகளை பெண்கள் தாமாகவே முன்வந்து பொருத்திக்கொள்கின்றனர். பெண்ணொருவர் பொது வெளியினில் தன்னுடைய கருத்துக்களையோ படைப்புக்களையோ முன்வைக்கப்படும் போது இச் சமூகத்தினால் வீசப்படும் எதிர்மறை விமர்சனங்கள் மற்றும் முரணான பின்னூட்டங்கள் பெரும் சவாலாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக பாலியல் வசை, உடல் ரீதியான விமர்சனங்கள், பகிடிகள், தவறாகச் சித்தரித்தல் போன்றவை பெண்களால் பரவலாக எதிர்கொள்ளுமாறு நிர்பந்தம் ஏற்படுத்தப்படுகின்றது. இதில் அவதானிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் பெரும்பாலும் ஒரு பெண் முதன்முறையாக இத்தகைய கருத்துக்களை ஏற்கும் சூழ்நிலையில் குறிப்பிட்ட பெண் தன்னுடைய முயற்சியை கைவிடுகின்ற நிலை ஏற்படுகிறது அல்லது முயற்சியில் பின்னிக்கும் அவலம் நிகழ்கிறது. ஒரு சில பெண்களே சமூக கணைகளை களைந்து தன்னுடைய நிலைத்திருகைக்காக பயணிக்க முயல்கின்றனர். ஏனெனில் பொதுவாழ்க்கைக்கு வரும் பெண்கள் தத்தமது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளமையேயாகும்.

பெண்கள் மீது தொடுக்கப்படும் துன்புறுத்தல், ஏற்றத்தாழ்வு மற்றும் சமுதாயத்தின் பல துறைகளில் பெண்களின் குறைவான பங்களிப்பு என தீர்வற்றவையாக தோற்றமளிக்கும் பல்வேறு பிரச்சனைகள், பெண்களிற்கு மனச்சோர்வையும் துயரத்தையும் கொடுப்பவையே. இவ்வாறான பிரச்சினைகள் குடும்ப அங்கத்தவர்களாலும், உறவினர்களாலும் அதிக அளவில் ஏற்படுத்தப்படுவதோடு பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் பிரச்சனைகளும் ஏராளம். ஐக்கிய நாடுகள் சபையானது பெண்களுக்கு எதிரான வன்முறையை, "காலங்காலமாய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமனில்லா செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்" எனவும், "ஆண்களை விடத் தாழ்ந்தநிலைக்குப் பெண்களைத் தள்ளும் இக்கட்டான சமுதாயச் செயற்பாடுகளுள் ஒன்றே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்." எனவும் வரைவிலக்கணப்படுத்துகின்றது. இலங்கையை பொறுத்த வரையிலும் கலாசாரம், சமூக கட்டமைப்புக்கள், பொருளாதார அணுகுதல்கள், மற்றும் அரசியல் என்ற அம்சங்கள் மூலமாக, கிராமப்புற பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக, பரவலாக கருதுகின்றனர். ஆயினும் கிராமப்புற பெண்களைப் போலவே, நகரப் புற பெண்களும் இந்தப் பிரச்சினைகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். பகலிலோ அல்லது இரவிலோ தனியாகவோ கூட்டமாகவோ செல்லும் பெண்கள், ஆண்களின் தேவையற்ற சீண்டல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிற நிலையில் பெண்களுடைய போக்குவரத்து நடவடிக்கைகளும் பெரிதும் நெருடலுக்குள்ளாகுமாறே கணிக்கப்படுகின்றது. பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது வாய்வழி அல்லது உடலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். முறைப்பாடு செய்யப்படும் பிறழ்வான நடவடிக்கைகளுக்கு தீர்வுகள் கிடைக்கின்ற போதிலும் பெரும்பாலான பிரச்சினைகள் முறைப்பாடு செய்யப்படுவதில்லை. இதன் பொருட்டே இன்னும் இன்னும் இத்தகைய துன்புறுத்தல்கள் துணிவுடன் அரங்கேறுகின்றன. மேலும் அரசுகளால் விளைவிக்கப்படும் வன்முறைகளாக போர்களின் போது போர் வன்புணர்வு, பாலியல் வன்முறை மற்றும் பெண்ணடிமைத் தனம், பள்ளிகளிலும் பொது இடங்களிலும் பெண்களுக்கான கழிப்பிட வசதி மறுக்கப்படுதல், கட்டாயக் கருக்கலைப்பு, காவல்துறை மற்றும் அதிகார வர்க்கத்தினால் வன்முறை, கல்லால் அடித்தல், தவிரவும் பெண்களைக் கடத்துதல், கட்டாய விபசாரம் போன்ற பல வன்முறைகளில் பாதிக்கப்பட்ட பெண்களிற்கான தீர்வுகள் வழங்க பின்னிற்றல் போன்றவற்றை குறிப்பிட முடியும் என்கின்ற போதிலும் மேற்குறிப்பிட்ட அத்தனை இடர்களும் இலங்கையில் இடம்பெறுகின்றவா என்பதன் நிச்சயத்தன்மை இன்றிய போதிலும் உலகளாவிய ரீதியில் இவ்வாறான வன்முறைகள் இடம்பெற்ற வண்ணமே தான் உள்ளன. குடும்பத்தினரால் விளைவிக்கப்படும் நேரடி மற்றும் மறைமுக வன்முறைகள் தொடர்பில் பொதுவில் பேசுவதற்கான வெளிகள்கூட பெண்களிற்கு கிடைப்பதில்லை. அதனையும் மீறி ஒரு பெண் தன்னுடைய குடும்பத்தினர் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து அவளே மேலும் துன்பங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. தொழில் தொடர்பான எண்ணக்கருக்களில் அணுகின்றபோது இன்றும் பல தொழில் தரு நிலையங்களில் பெண்கள் குறைந்தளவான ஊதியத்தை பெறுபவர்களாகவே இருக்கின்றனர். காரணம் குடும்ப வருமானம் என்று நோக்குகின்ற போது ஒவ்வொரு குடும்பத்தலைவனும், அவனது மனைவி பிள்ளைகள் உட்பட வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான அளவு வருமானத்தை கொடுப்பதற்காக தொழில் புரிபவனாக கருதப்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள் வருமானமீட்டலில் ஈடுபடும் போது, அது குடும்பத்தின் மேலதிக வருமானத்திற்காகவும் பிற தேவைகளுக்காகவும் அவள் உழைப்பதாகக் கருதி சமனான வேலைகளின் போதும் குறைந்தளவு ஊதியத்தையே வழங்குகின்றனர். அத்துடன் முதலாளித்துவ கலாசாரமும் தந்தை வழிச் சமூக அமைப்பின் உறுதித்தன்மையும் பெண்களது பொருளாதார அணுகுதலை முன்னிலைப்படுத்த பின்னிக்கின்றது. சமனற்ற கூலியை பெறுவது மட்டும் அல்லாமல் தொழிற்சாலை, வயல் அல்லது பெருந்தோட்டம் மற்றும் நாட்கூலி வேலைகளில் ஈடுபடும் பெண்கள் மட்டுமன்றி தொழில் முனையும் பெரும்பாலான பெண்கள் தொழில் செய்யும் நேரங்கள் தவிர்ந்த பிற நேரங்களை விட்டு வேலைகளிலும் செலவிடவேண்டியதாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் குடும்பத்தின் பிற உறுப்பினர்களும் இவை தொடர்பிலான புரிதலை கொண்டிருத்தல் நன்று. பொருளாதாரத்தையும் தாண்டி சுகாதாரம் மற்றும் உளவியல் பிரச்சனைகளையும் பெண்கள் எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் இலங்கை அரசின் அணுகுதல் பற்றி நோக்குகின்ற போது இலங்கையில் 1833 ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பெண்களைப் பலாத்காரம் செய்தல் பற்றிய சட்டம் இன்னமும் மாற்றப்படவில்லை. நூறு ஆண்டுகளை கடந்தும் மாற்றம் செய்யப்படாத சட்டம் போதுமானது என்ற எண்ணக்கரு எத்தனை ஆரோக்கியமானது என்பது கேள்விக்குறியே. அத்துடன் பெண் வன்முறைகள் தொடர்பான வழக்குகளில் உடனடி தீர்ப்பு வழங்கும் செயன்முறை அவசியம் ஆகும். வன்முறை நடந்து காலம் கடந்த பின் வழங்கப்படும் தீர்வுகள் வேறு பல சமூக பிரச்சனைகளை உருவாக்கலாம். பெண்களின் முன்னேற்றத்திற்கான அழுத்தங்கள் உலகளாவிய அளவில் முன்னெடுக்கப்பட வேண்டும். அண்மை ஆண்டுகளில், உலகளாவிய ரீதியில் நெறிமுறைகள், சான்றுரைகள் போன்றவற்றின் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைக்குத் தீர்வு காண முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய ஒன்றியம் பாலினத் துன்புறுத்தலுக்கான வழிகாட்டுதலையும் பெண் கடத்தல்களுக்கு எதிரான வழிகாட்டுதலையும் வெளியிட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்திலும் இலங்கையில் பெண்கள் விவகாரங்கள் தொடர்பில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருத்தலும் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் பெண்கள் முறைப்பாட்டு பிரிவு இருத்தலும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் பெண்களது விவகாரங்கள் அரச மட்டத்தில் அணுகப்படுதல் மட்டும் அல்லாமல் சமூக கண்ணோட்டங்களிலும் மாற்றங்கள் அவசியம். கலாசார விழுமியங்கள், மற்றும் நம்பிக்கைகளை வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தாது, அவர்களின் உடல், உள நலன் ஆரோக்கியங்களுக்காகவும் அவர்களின் எதிர்காலத்திற்காகவும் கருத்திற் கொண்டு, கலாசார விழுமியங்களில் மாற்றங்களை கொண்டு வர முயற்சித்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பெண்களும் தத்தமது தனிப்பட்ட இயலுமைகள் தொடர்பிலான விழிப்புணர்வை பெற்றுக்கொள்வதோடு குடும்ப வரைமுறைகளையும் தாண்டிய தமது ஆளுமை விருத்தி செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும், பிரச்சினைகளை எதிர்த்து குரல் கொடுக்கவும் முயல்தல் சிறந்தது.

**தொகுப்பு**



# பிராந்திய செய்திகள்



## இலங்கையில் முதலாவது குரங்கு அம்மை நோயாளி அடையாளம்

இலங்கையில் முதலாவது குரங்கு அம்மை நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் கடந்த முதலாம் திகதி டுபாயில் இருந்து வந்த 20 வயதுடைய இலங்கை இளைஞராவார்.



காய்ச்சல், தோலில் கொப்பளங்கள், வீங்கிய நிணநீர் முனைகள் போன்ற அறிகுறிகளுடன் அவர் பாலியல் நோய் பிரிவிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்களின் சந்தேகத்தின் அடிப்படையில், குறித்த நபரை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செல்லுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனைகளின்படி, குரங்கு அம்மைக்கான குறிப்பிட்ட மரபணுக்களை அடையாளம் காண காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி, குறித்த நபர் தற்போது கொழும்பு ஐடிஎச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## எரிவாயு பயனாளர்களுக்கான மகிழ்ச்சிகர அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 28,000 மெட்ரிக் டொன் எரிவாயுவை நாங்கள் பெற்றுக் கொள்ளவுள்ளோம், எனவே நவம்பரில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என தெரிவித்துள்ளார்.



## கல்முனை ஸாஹிறாவில் கணித முகாம்

கல்வி அமைச்சின் ஜெம் செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கணித முகாம் நிகழ்வுகள் கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது.

உள்ளக நிகழ்வுகள், வெளியக நிகழ்வுகள், மேடை நிகழ்வுகள் என மூன்று கட்டங்களாக நடைபெற்ற இம் முகாமில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளரும், உதவிக்கல்வி பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக் கலந்து கொண்டதுடன் மேலும் கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். சஞ்சீவன், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. இலங்கநாதன் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.எச்.எம்.அபூபக்கர், ஏ.எச்.எம். அமீன், கணிதபாட இணைப்பாளர் ஏ.எச்.எம். நிஸான், கல்லூரியின் கணிதபாட ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





## திருமண பதிவுக்கான தடை நீக்கம்

வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களை பதிவு செய்வதில் உள்ள தடைகளை நீக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன பதிவாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதுபோன்ற தடைகளுக்கு வழிவகுத்த சுற்றறிக்கையை உடனடியாக இரத்து செய்யவும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

## யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் கடற்கரையில் பகுதியில் 60 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் கடற்கரையில் இருந்து 60 கிலோ கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்கரையில் அன்று(04) காலை ரோந்து சென்ற இராணுவத்தினரே இவற்றை அவதானித்து கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவின் தொண்டிப் பகுதியில் இருந்து ஓர் இரகசிய படகு வருவதாக கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இராணவத்தினர் இந்த சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனை நடவடிக்கையிலேயே மேற்படி 60 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## வரலாற்றில் முதல் முறையாக தோட்ட தொழிலாளிக்கு நட்ட ஈடு!

தோட்ட நிர்வாகத்தின் அழுத்தத்தின் பேரில் பலவந்தமாக பணிக்கு அமர்த்தப்பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்த நமுனுகல கனவரெல்ல தோட்ட தொழிலாளி ஹர்ஷன் கணேஷ்மூர்த்தியின் மரணத்துக்கு நட்டஈடாக 40 இலட்சம் ரூபாவை கடுமையான போராட்டத்தின் மூலம் நமுனுகல பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளது.

இதற்கான காசோலையை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்,பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் குறித்த குடும்பத்தினருக்கு வழங்கி வைத்தனர்.

நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனம் உயிரிழந்த இளைஞனுக்கு மரண சடங்கிற்கான செலவு உட்பட 15000 ரூபாய் மாத்திரமே நட்ட ஈடு வழங்க முடியும் என தெரிவித்திருந்தது.

இத்தொகையை பெற்றுக் கொள்ள வேண்டாம் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் அக்குடும்பத்தினருக்கு அறிவித்திருந்த நிலையில், உயிரிழந்த இளைஞனுக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்படும் வரையில் இளைஞனின் பூதவுடல் அடக்கம் செய்யபடாது என தெரிவித்த செந்தில் தொண்டமான் இளைஞனின் பூதவுடலை தொழிற்சாலையில் வைத்து, நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

இச்சம்பவம் குறித்து நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தது. அம்முறைப்பாடிற்கு இ.தொ.கா இடமளிக்காமையால் தொழில் அமைச்சில முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் 14ம் திகதி தொழில் அமைச்சில், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் உயிரிழந்த தொழிலாளிக்கு உரிய நட்ட ஈட்டை வழங்குவது தொடர்பில் இ.தொ.கா தோட்ட நிர்வாகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உயிரிழந்த இளைஞனுக்கு 40 இலட்சம் ரூபாய் தருவதாக இப்பேச்சுவார்தையின் மூலமாக முடிவு செய்யப்பட்டது.

இந்த நட்டஈடு தொகை குறித்து இளைஞனின் குடும்பத்தார் மற்றும் தோட்ட மக்களுடன் கலந்து ஆலோசித்து அவர்களின் விருப்பத்திற்கு அமைய இ.தொ.காவின் தொடர் போராட்டத்தினால் இலங்கை வரலாற்றில் முதன் முறையாக தோட்ட தொழிலாளி ஒருவருக்கு நட்ட ஈடாக 40 இலட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.





# சினிமா துளிகள்



## 40 வயது நடிகருக்கு ஜோடியாக நடிக்கும் ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி !



பாலிவுட் திரையுலகில் மிகவும் பிரபலமான இளம் நடிகையாக திகழ்ந்து வருபவர் நடிகை ஜான்வி கபூர்.

இவர் திரைப்படங்கள் தொடர்ந்து வெளியாகி வருவதை பார்த்து வருகிறோம். அந்த வகையில் கடைசியாக இவர் நடிப்பில் குட் லக் ஜெரி என்ற திரைப்படம் வெளியாகியிருந்து.

இந்நிலையில் சமீபத்தில் நடிகை ஜான்வி கபூர் முன்னணி தெலுங்கு நடிகர் ஜூனியர் NTR-க்கு ஜோடியாக அவரின் அடுத்த திரைப்படத்தில் நடிப்பதாக சொல்லப்பட்டது.

மேலும் தற்போது இது குறித்து பேசியுள்ள ஜான்வி கபூர் தான் தற்போது வரை இந்தஒரு தென்னிந்திய திரைப்படத்திலும் கமிட்டாகவில்லை என தெரிவித்து இருக்கிறார்.



## இந்தியில் களமிறங்கிய ஐஸ்வர்யா ராஜேஷ்!

ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் சொப்பன சுந்தரி, டிரைவர் ஜமுனா போன்ற படங்கள் தயாராகி வருகிறது. இதைத்தொடர்ந்து அறிமுக இயக்குனர் சாம்ராட் சக்கரவர்த்தி இயக்கத்தில் இவர் "மாணிக்" படத்தில் நடிக்கவுள்ளார்.

ஐஸ்வர்யா ராஜேஷ் கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். அருண் ராஜா காமராஜ் இயக்கிய கனா படத்தில் கிரிக்கெட் வீராங்கனையாக நடித்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் ஃபர்ஹானா, டிரைவர் ஜமுனா, சொப்பன சுந்தரி ஆகிய படங்கள் அடுத்தடுத்து திரைக்கு வர உள்ளன.

தற்போது அதே கண்கள் படம் மூலம் பிரபலமான ரோகின் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். மாணிக் படக்குழு இந்நிலையில், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் "மாணிக்" என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார்.

எண்டேமோல் ஷைன் இந்தியா நிறுவனம் மற்றும் நட்மெக் புரொடக்ஷன்ஸ் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தை அறிமுக இயக்குனர் சாம்ராட் சக்கரவர்த்தி இயக்குகிறார்.

"மாணிக்" திரைப்படத்தில் சம்யுக்தா சண்முகநாதன், விவேக் பிரசன்னா, குழந்தை நட்சத்திரங்கள் சாய் ஜனனி மற்றும் ஸ்வர் காம்ப்ளே உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

தமிழ் மற்றும் இந்தி என இரண்டு மொழிகளில் உளவியல் திரில்லர் ஜானரில் தயாராகும் இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் நைனிடாலில் தொடங்குகிறது. மேலும், "மாணிக்" திரைப்படத்தை 2023-ஆம் ஆண்டு வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. ஐஸ்வர்யா ராஜேஷ் 2017-ல் "டாடி" என்ற இந்தி படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## தள்ளிப்போகிறது பிரபாஸ் படத்தின் ரிலீஸ்?

ராமாயண கதையை மையமாக வைத்து ஆதிபுருஷ் படம் தயாராகி உள்ளது. இதில் ராமராக பிரபாஸ், ராவணனாக சயீப் அலிகான், சீதையாக கீர்த்தி சனோன் நடித்துள்ளனர்.

ஓம் ராவத் இயக்கியுள்ள இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டு உள்ளனர்.

இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி சர்ச்சையை கிளப்பியது. ஆதிபுருஷ் டீசரில் இடம் பெற்றுள்ள காட்சிகள் வீடியோ கேம் போல் இருப்பதாகவும் ராவணனை தவறாக சித்தரித்து இருப்பதாகவும் பலர் கண்டித்தனர்.

இப்படம் வருகிற ஜனவரி மாதம் 12-ந்திகதி வெளியாக உள்ள நிலையில் படத்தின் ரிலீஸ் திகதி குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்தின் விஎப்எக்ஸ் காட்சிகளை உலகத் தரத்தில் உருவாக்கவும் சர்ச்சையை ஏற்படுத்திய காட்சிகளை சரி செய்யவும் படக்குழு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் ஆதிபுருஷ் படத்தை ஏப்ரல், மே மாதங்களில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## இந்தியன் 2 படத்தின் முழு பட்ஜெட் எவ்வளவு தெரியுமா!

பிரமாண்ட இயக்குனர் சங்கர் இயக்கத்தில் உலகநாயகன் கமல் ஹாசன் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் இந்தியன் 2. பல பிரச்சனைகளுக்கு பின் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது துவங்கியுள்ளது. இப்படத்தை ரெட் ஜெயண்ட் மற்றும் லைக்கா இரு நிறுவனமும் ஒன்றிணைந்து இப்படத்தை தயாரிக்கிறது.



சில வாரங்களுக்கு முன் துவங்கிய இப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் இருந்து கூட சில புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இணையத்தில் லீக்கானது. இந்நிலையில், மீண்டும் துவங்கியுள்ள இந்தியன் 2 திரைப்படம் சுமார் ரூ. 231 கோடி பட்ஜெட்டில் உருவாகி வருகிறது என தகவல் வெளியாகியுள்ளது. பொன்னியின் செல்வனை தொடர்ந்து தமிழ் சினிமாவில் உருவாகும் பிரமாண்ட திரைப்படமாக இந்தியன் 2 அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.


## பிரின்ஸ் மொத்த வசூல்

சிவகார்த்திகேயன் நடிப்பில் பிரின்ஸ் படம் இந்த தீபாவளி விருந்தாக திரைக்கு வந்தது.

இப்படம் ரசிகர்களிடம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது.

இந்நிலையில் அப்படியிருந்தும் பிரின்ஸ் படம் உலகம் முழுவதும் ரூ 50 கோடி வசூலை எட்டியுள்ளது.

இவை கண்டிப்பாக சிவகார்த்திகேயன் ஸ்டார் பவர் என்று தான் சொல்ல வேண்டும். இத்தனை நெகட்டிவ் கருத்துக்களையும் தாண்டி ரூ 50 கோடி வசூல் வந்தது பெரிய விஷயம் தான்.




## கேரளாவில் பெரும் தொகைக்கு விற்கப்பட்ட வாரிசு திரைப்படம் !

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமான நடிகர் விஜய் நடிப்பில் இயக்குநர் வம்சி இயக்கத்தில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள திரைப்படம் வாரிசு.

இப்படம் வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பிரம்மாண்டமாக வெளியாக இருக்கிறது.

வாரிசு திரைப்படத்தின் முதல் சிங்கிள் பாடலான ரஞ்சிதமே பாடலின் ப்ரோமோ வெளியாகி பெரிய வரவேற்பை பெற்று வருகிறது.

இதற்கிடையே இப்படத்தின் விநியோகம் குறித்த தகவல் வெளியாகியிருக்கிறது.

அதன்படி வாரிசு திரைப்படத்தின் கேரளா ரைட்ஸ் ரூ. 6.5 கோடிக்கு விற்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# விவசாயத்தின் வீழ்ச்சியே பொருளாதார பின்னடைவுக்கு காரணம்

ஐரோப்பாவில் 15ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் பல ஐரோப்பிய நாடுகள் அபிவிருத்தி என்ற மட்டத்தை அடைந்தபோதிலும் அந்நாடுகள் விவசாய உற்பத்தி பொருட்களை ஏனைய கண்டங்களில் இருந்து பெறவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. குறிப்பாக தேயிலை, இறப்பர், தெங்கு, மரக்கறி வகைகள் போன்றவற்றை ஆசிய - ஆபிரிக்க கண்டத்தில் உள்ள விவசாய நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அக்காலகட்டங்களில் உலக தரம் வாய்ந்த தேயிலை உற்பத்தியில் ஆசியக் கண்டத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாடு விளங்கியது. அத்துடன் இலங்கை தேயிலை, இறப்பர், தெங்கு, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்து அவ் ஏற்றுமதி மூலம் மிகப்பெரிய வருமானத்தை ஈட்டி வந்தது. அதுமட்டுமன்றி நெல் உற்பத்தியிலும் அக்காலகட்டங்களில் தன்னிறைவு பெற்று இருந்தது.



இலங்கையில் சிறந்த தேயிலை உற்பத்தி செய்வதற்கு மலைநாட்டுப் பிரதேசம் சிறந்த இடமாகப் பார்க்கப்பட்டதுடன் சிறந்த காலநிலை, நல்ல மண் வளம், தேயிலைத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு என்பன தேயிலை ஏற்றுமதி உச்ச நிலையை அடைய காரணமாக இருந்தன.

அத்துடன் நெல் உற்பத்தியினை நாடு தழுவிய ரீதியில் அக்காலத்தில் ஈடுபட்டதனாலும் விவசாய உற்பத்தித்துறையில் பலர் நாட்டம் கொண்டு செயற்பட்டதாலும் அக்காலங்களில் ஆட்சி செய்த அரசியல் தலைவர்கள் விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கியதால் விவசாயத்தில் இலங்கை செழித்து இருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த 1948 - 2000ம் ஆண்டு வரை விவசாயத்துறையின் வளர்ச்சியானது அபரிமிதமான நிலையினை எட்டி இருந்தது. 1970க்குப் பின்னான காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட இன மோதல்களினால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தபோதிலும் விவசாயத்தில் பாரிய முன்னேற்றம் கண்டதனால் உணவுக்கானத் தட்டுப்பாடோ, பொருளாதார நெருக்கடியோ கூறுமளவுக்கு ஏற்படவில்லை. இன மோதலின் உச்சமாக இருந்த வடகிழக்கு பிரதேங்களில் மிகப் பெரிய பொருளாதாரத் தடையை அக்கால கட்டங்களில் ஆட்சி செய்த அரசியல் தலைமைகள் ஏற்படுத்தியபோதும் விவசாய நிலையில் இருந்த அபிவிருத்தியினால் வடகிழக்கில் பட்டினிச்சாவை எதிர்கொள்ளவில்லை.

யுத்தத்தின் அகோரத்தினால் வடகிழக்குப் பகுதிகளில் 1980க்குப் பின்னர் பல தமிழர்கள் புலம்பெயர்ந்தபோதிலும் விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு விவசாயத்தில் தன்னிறைவு பெற்று இருந்தது.

அத்துடன் 1990க்கு பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபொழுது அங்கு உற்பத்தி செய்யப்படும் நெல்லை அங்குள்ள மக்களின் தேவைக்கு பயன்படுத்தி மிகுதியாக இருப்பவற்றை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அவ் நெல்லை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டும் இருந்தது.

1995 யாழ்ப்பாணம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு சுமார் 5 இலட்சம் யாழ் மக்கள் இடம்பெயர்ந்து வன்னி பெரு நிலப்பரப்புக்கு வந்தபொழுது மிகப்பெரும் சன நெருக்கடியும் உணவு நெருக்கடியும் ஏற்பட்டபோதிலும், அன்று அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. அத்துடன் தென்பகுதியில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உணவுப் பொருட்கள் அரசினால் வன்னிக்கு அனுப்பப்பட்டபோதிலும் அங்கு மக்கள் பொருளாதார நெருக்கடியினை சந்திக்கவில்லை. அதற்கு முழுக்காரணமும் அங்கு விவசாயத் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தி என்று கூறலாம்.

இராணுக் கட்டுப்பாட்டில் இருந்த வவுனியாவில் 1 கிலோ அரசி 40 ரூபாவிற்கு விற்கப்பட்ட பொழுதிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவில் 1 கிலோ அரிசி 5 ரூபாவுக்கு விற்கப்பட்ட வரலாறுகளும் உண்டு. 2000க்குப் பின்னரான காலகட்டங்களில் விவசாயத்துறைக்கு இருந்த முன்னுரிமையானது சரிபாதியாகி கைத்தொழில் துறைக்கு செலுத்த தொடங்கினர். இதன் உச்சக்கட்டமாக 2019க்கு பின்னர் கோட்டாபய அவர்களின் ஆட்சியில் இரசாயன உரப் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டதுடன் உர இறக்குமதிக்கும் தடைவிதிக்கப்பட்டது.

இயற்கை உரப் பாவனைக்கு அனைத்து விவசாயிகளையும் மாறும்படி அறிவித்தல் வழங்கப்பட்டது. பல ஆண்டுகளாக இரசாயன உரப் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட மண் வளமானது திடீரென்று கோட்டாபய அவர்களின் அறிவிப்புக்கு இணங்கி இயற்கை உரத்துக்கு மாற்றுவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். இதனால் பல ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியது. பல விவசாயிகள் நெல் உற்பத்தியில் இருந்து விலகி கச்சான், சோளன் போன்ற பயிர்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். இதனால் பாரியளவிலான அரசி தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் விலையேற்றமும் விண்ணைத்தாண்டி சென்றுள்ளது. அரசி இறக்குமதி செய்யப்பட்டது. சில நாடுகள் நன்கொடையாகவும் சில நாடுகள் கடன் அடிப்படையில் அரசியை இலங்கைக்கு வழங்கியது. அத்துடன் உரத் தட்டுப்பாட்டால் மரக்கறி உற்பத்தியிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. மரக்கறி விலைகளும் அதிகரித்துள்ளது.

இலங்கைக்கு பொருளாதார ரீதியாக பெரும் அந்நிய செலாவணியை கொண்டுவரும் தேயிலை உற்பத்தியில் மிகப்பெரும் பின்னடைவை சந்தித்து உரத் தடையால் தேயிலைத் தோட்டங்களின் உற்பத்திகள் பாதிப்படைந்தன. ஒரு காலகட்டத்தில் இலங்கை தேயிலைக்கு இருந்த மதிப்பு இல்லாமல் போகத் தொடங்கியது.

2015ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதிகளில் ஏற்றுமதி தேயிலையில் தரம் குறைந்த 3ம், 4ம் தர தேயிலைகளைக் கலந்து ஏற்றுமதி செய்யப்பட்டு இறக்குமதி செய்யும் பல நாடுகள் தேயிலையின் தரம் குறித்து இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு அவ்வாறான தேயிலையும் இலங்கைக்கு திரும்பி அனுப்பப்பட்டது. குறிப்பாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, ஐரோப்பிய நாடுகள் தேயிலையினை திருப்பி அனுப்பியதுடன் இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதியை தடை செய்ததுடன், இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளில் இருந்து தேயிலையை பெறத் தொடங்கின.

இதன் தாக்கம் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையை இட்டுச்சென்றது. ஏற்கனவே கொவிட் தொற்று, ஐஎஸ் ஐஎஸ் தாக்குதல் என சுற்றுலாத் துறை பாரிய வீழ்ச்சியை சந்தித்திருந்த நிலையில், தேயிலை ஏற்றுமதி முற்றாக செயலிழந்து காணப்பட்டது. தன்னிறைவில் இருந்த அரிசி, கிழங்கு, வெங்காயம், மரக்கறி வகைகள் அனைத்தும் உரத் தட்டுப்பாட்டால் இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டதுடன் பெரும் நிதி இதற்கு ஒதுக்கவேண்டி ஏற்பட்டது. ஒருபுறம் ஏற்றுமதியில் பின்னடைவு மறுபுறம் தன்னிறைவாக காணப்பட்ட பொருட்களைக் கூட இறக்குமதி செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை. அத்துடன் எரிபொருள் நெருக்கடியும் விவசாயத்துறையை மிகவும் பாதித்தது.

உழவுத் தொழிலுக்கான இயந்திரங்களும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உழவு செய்வதற்குஏக்கருக்குமிகப்பெரும்தொகையை செலவழிக்க வேண்டி ஏற்பட்டது. நெல் அறுவடையின் போதும் பெருந்தொகையை செலவழிக்க வேண்டி ஏற்பட்டது. நெல்லுக்கு தேவையான பூச்சிகொல்லி மருந்து தட்டுப்பாட்டால் பாரிய சவாலை விவசாயிகள் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வாறான காரணங்களால் விவசாயத்துறை முற்றாக வீழ்ச்சியின் பாதையை நோக்கி பயணித்தது.



அதன் தாக்கம் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு பிள்ளையார் சுழி போட்டதாக அமைந்துவிட்டதுடன் இதன் எதிரொலி 2022ம் ஆண்டு கோட்டாபய அவர்களின் ஆட்சி அகற்றப்பட்டு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதுடன் உரத் தட்டுப்பாட்டை நீக்கியதுடன் உர இறக்குமதிக்கு இருந்த தடை நீக்கப்பட்டது. கிருமிநாசினிகளுக்கான தடைகளும் நீக்கப்பட்டன.

தற்போது தேயிலை உற்பத்தித்துறையை முன்னேற்றுவதற்கு ரணில் அவர்கள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்த போவதாக அண்மையில் அறிவித்துள்ளார். தேயிலை உற்பத்தியை மிக அதிகமாக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக கூறியுள்ளார். தேயிலை உற்பத்தியை அதிகரிக்க முயற்சி எடுப்பது மிகவும் நல்லவிடயம். பல ஆண்டுகளாக சம்பள உயர்வைக் கோரி நிற்கும் மலையக மக்களின் கோரிக்கையை செவிசாய்த்து அவர்களுக்கு தகுந்த ஊதியத்தை வழங்க ரணில் அரசு முன்வரவேண்டும்.

நெல் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். விவசாயிகளுக்கும் மானியங்கள், இயற்கை அழிவுகளின் போது இழப்பீடுகள், காப்புறுதிகள் என்பன வழங்கி விவசாயத்துறையை ஊக்குவிக்கவேண்டும். இலங்கையின் பல குளங்கள் செயலற்று பாதிப்படைந்துள்ளது. குளங்களை அபிவிருத்தி செய்து நீர் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும். விவசாயத்தை நோக்கி இளம் தலைமுறையை ஊக்கப்படுத்தி முன்னகர்த்த வேண்டும். அண்மையில் அப்பிள் உற்பத்தி இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் அந்த அப்பிள் செய்கையை ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்ளவேண்டும். அதற்கான ஏதுநிலைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். வாழைக்குலை ஏற்றுமதியில் கடந்த காலங்களில் பாரிய இலாபத்தை பெற்றுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையில் குறிப்பாக வட-கிழக்குப் பகுதிகளில் வாழைக்குலை உற்பத்தி பெருமளவில் செய்யப்படுகின்றது. ஏற்றுமதியும் செய்கின்றனர். இதனை மேலும் அதிகரிக்க வேண்டும்.

அண்மைக்காலமாக கர்ப்பிணிப் பெண்களுக்கு கொடுக்கப்படும் சத்துள்ள திரிபோசாவினை கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அதற்குக் காரணம் அவ் மாவை தயாரிக்கப் பயன்படும் சோள உற்பத்தி குறைவடைந்ததுடன் சோளன் மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு எமது நாட்டு மண் வளத்துடன் ஒத்துபோகக்கூடிய பயிர்களை கூட பயிரிட முடியாமல் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதானது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம்.

எனவே அரசானது விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கி விவசாயத் துறையை ஊக்கப்படுத்தி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அரிசி, சோளன், வெங்காயம், உருளைக்கிழங்கு என்பவற்றை நிறுத்தி எமது நாட்டில் உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். விவசாயிகளுக்கான மானியங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எமது உணவுத்தேவையினை நாமே பூர்த்திசெய்யும் நாடாக மாறவேண்டும். வீட்டுத்தோட்டத்தை ஊக்கப்படுத்தவேண்டும். ஒவ்வொரு குடும்பமும் விவசாயத்தில் தன்னிறைவு அடைவதன் ஊடாக இப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண கட்டாயம் இயலும். உழுதுண்டு வாழ்வோம் என்கிற வாக்கிற்கிணங்க விவசாயத்தை முன்னேற்றுவோம். பட்டினிச்சாவை விரட்டியடிப்போம்.

**லாசர்**

5ஆம் பக்க தொடர்ச்சி...

ரணில் என்கிற ஒருவராலேயே உடைபட்டு சின்னாபின்னமான ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் மீண்டும் வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை எள்ளளவும் இல்லாமலாக்க ரணில் அவர்கள் துணியமாட்டார். இனிவரும் காலங்களில் தனக்கான கூட்டணிகளை அமைத்துக்கொண்டு பாராளுமன்றில் செயற்படவேண்டும் என்ற நோக்குடன் தான் தனது சகாக்களை வைத்துக்கொண்டு, தனக்குச் சார்பான மொட்டு மற்றும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை முக்கிய பதவிகளில் நியமித்துள்ளார். பிரதமர் பதவி இன்று பெயரளவில் இருக்கிறதே தவிர ஜனாதிபதியே அதிகாரம் பொருந்தியவராக இருக்கிறார். இவ்வாட்சி கலைக்கப்பட வேண்டும் என்கிற மக்களின், அரசியல்வாதிகளின் கோசங்களை எல்லாம் உடைத்தெறிந்து, நான்கரை வருடங்களில் மீதமுள்ள இரு வருடங்களையும் முழுமையாக ஆட்சி செய்ய ரணில் அவர்கள் துணிந்துள்ளார். அதற்கான நடவடிக்கைகளையே அவர் தற்போது மேற்கொண்டுள்ளார்.

மீண்டுமொருமுறை ராஜபக்சக்களுக்கான வாக்கு வங்கி இந்த நாட்டில் கிடையாது. அதற்கான அனைத்து எதிர்ப்பு வேலைகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கை மக்களால் எதிர்க்கும் தரப்பாக மஹிந்த தரப்பு மாறியிருக்கிறது. நாட்டைவிட்டுத் தப்பியோடிய முன்னாள் ஆட்சியாளர் கோட்டாபய ராஜபக்ச மீண்டும் நாட்டிற்கு வந்து வீட்டிற்குள் முடங்கியுள்ளார். பசில் ராஜபக்ச நாட்டைவிட்டே தப்பியோடியுள்ளார். எனவே இவர்களுக்கான வாக்கு வங்கி என்பது இனிவரும் காலங்களில் அவ்வளவு எளிதில் சாத்தியப்படாது.

மற்றைய பக்கம் மைத்திரி தரப்பினர் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளனர். சுதந்திரக்கட்சி பிளவடைந்து சின்னாபின்னமாகி கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் தேர்தலில் பெருமளவில் வெற்றிபெற இப்போதைக்கு வாய்ப்பில்லை. இனிவரும் தேர்தல்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவுத்தளத்தையே தேடித்தரும். சஜித் அணியினரின் பக்கமாக சிறுபான்மைக் கட்சிகள் இணைந்திருந்தாலும், தமிழ் மக்களின் ஆதரவு கேள்விக்குறியாக மாறியுள்ளது. கடந்த காலத்தில் சஜித் அவர்களின் இயலாமை வெளிப்பட்டதைக் காண முடிந்துள்ளது. எந்தநேரத்திலும் ரணில் பக்கம் தாவுவதற்கு பல உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர். இதனை ஜனாதிபதித் தெரிவின் போதான பாராளுமன்ற வாக்கெடுப்பில் அறிய முடிந்தது. டளஸ் அணி ஒரு பக்கமாக பயணத்தை ஆரம்பிப்போமா? அல்லது அடங்கிவிடுவோமா என்று இன்னமும் முடிவு செய்யவில்லை.

இன்று சந்திரிக்கா அம்மையாரது மகனின் அரசியல் பிரவேசம் குறித்துப் பேசப்படுகிறது. எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சி என்பது கூட்டணிகளை நம்பியே அமையும் போக்கு காணப்படுகிறது. தனித்து யாரும் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க இயலாது. கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவானது, நாட்டிலிருந்து வெளியேறிவரும் மக்கள் தொகை என்பன இலங்கையின் எதிர்கால அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது.

தமிழ் மக்களின் போராட்டங்கள் மழுங்கடிக்கப்படுவதற்கு வித்திட்ட நபராக அறியப்படும் இவர், தனது தேவைக்கேற்ப தமிழ்த் தரப்பினரைப் பயன்படுத்தியுள்ளார் என்பது வெளிப்படையானது. ரணில் அவர்களைப் பயன்படுத்தி ராஜபக்சக்களோ அல்லது சஜித் அணியினரோ, மைத்திரி தரப்போ பயனடையலாம் என கனவுகண்டால் அது வேடிக்கையானது. யார் என்ன கூறினாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தனது கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துவிட்டார் என்றே கூறலாம்.

# வாழ்க்கை தத்துவம் கவிதை வரிகள்

நமக்கு வாழ்கை பல அனுபவங்களையும் பாடங்களையும் கற்றுத் தருகின்றது அதில் முக்கியமான ஒன்று தான் நாம் யார் யாரிடம் எவ்வாறு பழக வேண்டும் எந்த அளவோடு பழக வேண்டும் என்பது.

உங்கள் மீது அதீத நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் என்று நினைக்காதீர்கள் அது தான் துரோகத்தின் உச்சம்.



உங்களுக்கு தெரிந்த விடயங்களை மட்டும் மற்றவர்களுடன் பேசி பழகுங்கள் இது காலப்போக்கில் உங்கள் மீதான நம்பிக்கை மற்றும் மரியாதையை அதிகப்படுத்தும்.

சந்தோஷமான நேரத்திலும் துன்பமான நேரத்திலும் நாம் நினைவில் வைத்திற்குக்க வேண்டிய ஒரு உண்மை இந்த நிமிடம் கூட நிரந்தரம் இல்லை.

நினைவில் வைத்துக் கொள் உன் வாழ்க்கையில் உறக்கம் இரக்கம் இரண்டும் அளவோடு தான் இருக்க வேண்டும். உறக்கம் அளவுக்கு மீறினால் சோம்பேறி என்பார்கள். இரக்கம் அளவுக்கு மீறினால் ஏமாளி என்பார்கள்.

கடன்களும் நினைவுகளும் தேவைக்கு ஏற்ப அளவோடு இருக்க வேண்டும். கடன்களும் நினைவுகளும் அளவுக்கு மீறினால் இரண்டுமே தூக்கத்தை பறித்து விடும்.

வாழ்வில் வரும் வலிகளை சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொள்ளுங்கள். அப்படியே சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொண்டால் உன்னை விட வலிமையானவர்கள் யாரும் இல்லை இந்த உலகில்.

ஒரு தவறை செய்தால் ஒதுக் கொள்ள எந்த சூழ்நிலையிலும் தயங்காதீர்கள் அவற்றை சரி செய்து கொள்ள முடியும். ஆனால் செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை வாழ்நாளில் சரி செய்ய முடியாது.

மற்றவர்களிடம் குற்றம் என அடையாளம் காணும் விடயம் நம்மக்கு ஏற்பட்டால் அதை சோதனை என்று அழைக்கிறோம்.

உன் பாதையை நீயே உருவாக்கிக் கொள்ளும் தண்ணீராக இரு. வாழ்வில் எதையும் சாதிக்கலாம். அடுத்தவர் பாதையை தடுக்கும் பாறையாக இருந்து விடாதே.

மனதில் நஞ்சு வைத்து உதட்டில் தேனாக கொஞ்சி பேசும் மனிதர்களும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதே.

காகமும் குயிலும் பார்ப்பதற்கு இரண்டும் ஒன்று போல தான் தோற்றமளிக்கும். ஒருவரின் வெளித் தோற்றத்தை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.

# படித்ததில் பிடித்தது..



ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது.. அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்..

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்..

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்..

ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்..

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்..

ஆத்திரமடைந்த வியாபாரி, அந்த வழிப்போக்கனை பார்த்து, "அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்... அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!" என்று திட்டினான்..

அதற்கு அவன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான்.. ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய முட்டாள்" என்றான்..சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

# நகைச்சுவை துணுக்குகள்


கணவன்:உன்னைக் கட்டினதுக்குப் பதிலா ஒரு எருமை மாடைக் கட்டியிருக்கலாம்.

மனைவி:ஆனா...அதுக்கு எருமை மாடு சம்மதிக்கணுமே?

எல்லா பிகர்"யும் பாக்க நினைப்பது பாய்ஸ் மென்டாலிட்டி..

ஆனா எல்லா பாய்ஸ்"ம் தன்ன மட்டுமே பாக்கனும்னு நினைப்பது கேர்ள்"ஸ் மென்டாலிட்டி..

So, Boys are Genius.... Girls are Selfish....



டேய் என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம்.
இப்பவாவது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லைன்னு???????

படத்தின் முடிவில் தற்கொலை செய்து கொள்கிறார்... யார்..வில்லனா? கதாநாயகனா?.. தயாரிப்பாளர்..

கேர்ள்: எக்ஸாம் டைம்"ல நாங்க டி.வீ, ரேடியோ, கம்ப்யூட்டர், செல்போன் தொடவே மாட்டோம்...

பாய்: இவ்வளவு தானா? நாங்க புக்கையே தொட மாட்டோம்...

ஒரு கல்லூரி வாட்ச்மேனிடம், பெற்றோர்கள்: "இந்த காலேஜ் எப்படி? நல்ல காலேஜ் தானே? "

வாட்ச்மேன்: "அப்படித்தான் நினைக்கிறேன். இங்குதான் நான் இன்ஜினியரிங் டிகிரி முடிச்சேன்.. உடனடியாக எனக்கு வேலை கிடைத்துவிட்டது"

பெற்றோர்கள்: ?!?.....



# பல்சுவை கதம்பம்



## அழகுக்கு அழகு சேர்க்கும் பால்

### சருமத்தை இளமையாக வைத்திருக்க அழகு குறிப்புகள்

சருமத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்ள தினமும் பாலை முகத்தில் தடவிவர வேண்டும். இதன் மூலம் முகத்தில் தோன்றும் இறந்த செல்களை வெளியேற்றி, புதிய செல்களை பிறக்க வைப்பதுடன் முகம் பளபளக்க செய்யும். முகத்தில் தோன்றும் சுருக்கங்களை அகற்றி முகத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்கிறது.வாரத்தில் இரு முறையாவது உடல் முழுக்க பாலை தடவி அல்லது குளிக்கும் நீரில் பாலை கலந்து குளித்து வரலாம். இதன் மூலம் முகத்தில் தோன்றும் எண்ணெய் பசை மற்றும் இறந்த செல்கள் முற்றிலும் அகன்று, முகம் பொலிவுடன் காணப்படும். மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

### ஈரத்தன்மை

பாலை தினமும் உடலில் தடவிவர சருமம் பளபளப்பாகவும், மென்மையாகவும் மற்றும் அழகாகவும் காணப்படும். கண்டிஷனருக்கு பதிலாக நீங்கள் பாலை பயன்படுத்தலாம். முடி அதிக வறட்சியுடன் இருந்தால் பால் இரண்டு டீஸ்பூன், தயிர் ஒரு டீஸ்பூன்.கலந்து தலைமுழுவதும் தேய்த்து ஹேர் கேப் அணிந்து கொள்ளுங்கள். பின்னர் 40 நிமிடங்கள் கழித்து தலைக்குளித்திடுங்கள்.

### முகம் சுருக்கம் நீங்க அழகு குறிப்புகள்

முகத்தில் தோன்றும் சுருக்கங்களை கட்டுப்படுத்த தினமும் முகத்தில் பால் தடவ வேண்டும். இது முக சுருக்கத்தை கட்டுப்படுத்த மிகவும் உதவுகிறது. தினமும் பாலுடன் 1/2 துண்டு வாழைப்பழத்தை சேர்த்து பேஸ்டு போல் அரைத்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ முக சுருக்கங்கள் மறைந்து விடும்.

### வறண்ட சருமம் பொலிவு பெற அழகு குறிப்புகள்

முகம் வறண்டு போனால் நாம் வழக்கமாக மாய்சரைசர் பயன்படுத்துவோம். ஆனால் அவற்றில் இருக்கும் கெமிக்கல்ஸ் முகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே அதற்கு பதிலாக முகத்திற்கு மாய்சரைசராக பாலை பயன்படுத்தலாம்.

### முகத்தில் உள்ள தழும்பு மறைய அழகு குறிப்பு

குழந்தை முகத்தை தவிர பொதுவாக அனைவருக்குமே முகத்தில் ஏதாவது காயத்தினால் ஏற்பட்ட தழும்புகள் அல்லது கரும்புள்ளிகள் இருக்கும். அவற்றை போக்க தினமும் பாலை முகத்தில் தடவி வர முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகள் ஆகிய பிரச்சனைகளை குணப்படுத்தும் தன்மை வாய்ந்தது.

அதுவும் பசும்பாலை காய்ச்சாமல் அப்படியே முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவலாம். அல்லது உருளைக்கிழங்கை அரைத்து அவற்றில் பால் கலந்து முகத்தில் தடவி வர முகத்தில் இருக்கும் தழும்புகள் மற்றும் கரும்புள்ளிகள் மறையும்.

### சூரிய ஒளியில் இருந்து சருமத்தை பாதுகாக்க அழகு குறிப்புகள்

சூரிய ஒளியில் இருந்து சருமத்தை பாதுகாக்க, தினமும் உடல் முழுவதும் பாலை தடவ வேண்டும். இதன் மூலம் சூரிய ஒளியினால் கேடு விளைவிக்கும் கதிர்களிடமிருந்து சருமத்தை பாதுகாக்க முடியும்.

அதாவது சூரிய ஒளியினால் முகத்தில் ஏற்படும் தடிப்புகள், வறண்ட சருமம், சரும அரிப்புகள் போன்ற பிரச்சனையை சீர் செய்கிறது.மேலும் சருமத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்க வழிவகுக்கிறது.

### சருமத்தில் நிறமாற்றத்தை உணர அழகு குறிப்புகள்


அதாவது ஆடை அணிந்து மறைக்கப்பட்ட பாகங்கள் ஒரு நிறமாகவும், சூரிய ஒளி தாக்குதலின் பாதிக்கப்பட்ட சருமங்கள் ஒரு நிறமாகவும் இருக்கும்.

இவற்றை சரிசெய்ய தினமும் உடல் முழுவதும் பாலை தடவி வர நிறமாற்றங்கள் அடைந்த பகுதிகள் ஒரே நிறத்தில் இருக்க வழிவகுக்கிறது.

## வெண்டைக்காய் குழம்பு

தேவையானவை: வெண்டைக்காய் - கால் கிலோ, வெங்காயம் - 1, கீறிய பச்சை மிளகாய், தக்காளி - தலா 2, பூண்டு - 2 பல், புளி - நெல்லிக்காய் அளவு, கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு - தலா அரை டீஸ்பூன், மஞ்சள்தூள் - கால் டீஸ்பூன், மிளகாய்தூள் - 2 டீஸ்பூன், தேங்காய் துண்டுகள் - 2, சீரகம் - ஒன்றரை டீஸ்பூன், கறிவேப்பிலை, குழம்பு பொடி - ஒரு டீஸ்பூன், எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன், உப்பு - தேவையான அளவு.

செய்முறை: வெங்காயம், வெண்டைக்காய், தக்காளியைப் பொடியாக நறுக்கவும். தேங்காய், சீரகத்தை அரைத்துக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். பிறகு நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு, வெண்டைக்காய் ஆகியவற்றை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு நன்றாக வதக்கவும். தக்காளி, மஞ்சள்தூள், உப்பு சேர்த்து மீண்டும் வதக்கி... மிளகாய்த்தூள், தேங்காய் - சீரகம் விழுதைப் போட்டு வதக்கவும். கடைசியாக புளியைக் கரைத்து ஊற்றி, சிறிது தண்ணீர் விட்டு, குழம்பு பொடி சேர்த்து, நன்றாகக் கொதித்ததும் இறக்கவும்.



ஏதோ ஓர் பிரிவு நம்மை
கலங்கடிக்கையிலே
வலிகளின் நிஜத்தை
உணர்கிறோம்...
பிரிந்தும் கூட
நினைவினில் நிழலாய்
யாராலும் களவாட
முடியாத பொக்கிஷ
மாய் நாம் பழகிய
நினைவுகள்!!!



## குதிகால் வெடிப்பை போக்கும் அருமையான பாட்டி வைத்தியங்கள்!

### தேன் மற்றும் அரிசி மாவு

பாதங்கள் ஈரப்பதத்துடன் இருக்க, தேன் பெரிதும் பயன் தரும். தேனில் சிறந்த ஆன்டிபாக்டீரியல் குணங்கள் அடங்கியுள்ளன. 2 டீஸ்பூன் அரிசி மாவுடன் கொஞ்சம் தேன் மற்றும் ஆப்பிள் சீடர் வினிகரை சேர்த்து, அடர்த்தியான பேஸ்ட் தயார் செய்யுங்கள்

### பப்பாளி

நன்கு மசித்து வைத்த பப்பாளிப்பழத்தை பாலுடன் கலந்து குதிகால்களில் தடவி 10 நிமிடங்கள் கழித்து காய்ந்தவுடன் தேய்த்து கழுவுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் பிளவு ஏற்பட்ட பகுதியில் தோல்கள் ஒன்று சேர்ந்து புதிய தோல்கள் போல தோற்றமளிக்கும்.

### வேப்பிலை பேஸ்ட்

கையளவு வேப்பிலையை எடுத்து அதனுடன் சுண்ணாம்பு சிறிது சேர்த்து அரைத்துக் கொள்ளுங்கள். ஓய்வு நேரத்தில் சூடா நீரில் கால்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து பின்னர் சுண்ணாம்பும் வேப்பிலையும் கலந்த பேஸ்ட்டை தடவவும். 15 நிமிடங்கள் கழித்து பாதத்தை ஸ்க்ரப் செய்து கழுவுங்கள். வாரம் இருமுறை செய்தால் போதும். பாதம் மிருதுவாக வெடிப்பின்றி காணப்படும்.

## உதடு கன்னங்களில் உண்டாகும் கருமையை போக்குவது எப்படி?

வேக வைக்காத உருளைக்கிழங்கை எடுத்து அதை சிறிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும். இப்பொழுது பாதிக்கப்பட்ட சரும பகுதியில் இந்த துண்டுகளை கொண்டு தேய்க்கவும். 15- 20 நிமிடங்கள் அப்படியே விட்டு விட்டு பிறகு குளிர்ந்த மற்றும் சூடான நீர் கலந்த கலவையில் கழுவ வேண்டும். தினமும் இதை செய்து வந்தால் நல்ல மாற்றத்தை காணலாம்.

2 டீ ஸ்பூன் லெமன் ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து கொள்ளவும். இப்பொழுது இந்த கலவையை ஒரு பஞ்சில் நனைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும். பிறகு 10-15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த மற்றும் சூடான நீரில் கழுவவும்.வாரத்திற்கு 4-5 முறை என்று பயன்படுத்தி வந்தால் கருமை நீங்கும்.

கற்றாழை ஜெல்லை பாதிக்கப்பட்ட சருமத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து குளிர்ந்த மற்றும் சூடான நீரில் கழுவவும். இந்த முறையை ஒரு நாளைக்கு பல முறை என்ற முறையில் பயன்படுத்தி வந்தால் சரும கருமை நீங்குவதோடு சருமம் மிருதுவாகவும் மாறும்.

1 டீ ஸ்பூன் சந்தனப் பொடி மற்றும் 2 டீ ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து இந்த பேஸ்ட்டை கருமை உள்ள இடத்தில் தடவ வேண்டும். பிறகு 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும். வாரத்திற்கு 3-4 முறை என்ற விதத்தில் செய்து வந்தால் விரைவான மாற்றத்தை காணலாம்.

தேனை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி 15-20 நிமிடங்கள் அப்படியே வைத்து இருக்க வேண்டும். பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவவும். ஒரு நாளைக்கு ஒரு முறை என்று செய்து வந்தால் நல்ல தீர்வு கிடைக்கும்.

நமது பாரம்பரிய இயற்கை பொருளான மஞ்சள் தூளில் நிறைய ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் உள்ளன. இவை நமது சருமத்தில் உள்ள கருமையை போக்குகிறது. எனவே உங்கள்உதடு மற்றும் கன்னத்தை சுற்றி இருக்கும் கருமை சருமத்தை போக்குகிறது.

# இலங்கையில் அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள் : சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும், இல்லையேல் ஆபத்து

இன்றைய நவீன உலகத்தில் உலகளாவிய ரீதியிலும், நாடளாவிய ரீதியிலும் பாலியல் வன்கொடுமை என்பது சர்வ சாதாரணமானதாக மாறிவிட்டது. குறிப்பாக கொரோனா வைரஸ் காலப்பகுதியில் பாலியல் வன்கொடுமைகளோடு சேர்ந்து குடும்ப வன்முறைகளோ தலைவிரித்து ஆடுகின்றது. இதனால்தற்கொலைமரணங்களும்அதிகரித்து கொண்டே செல்கின்றது. விடுதலைப்புலிகள் இருந்துவந்த காலப்பகுதிகளில் பாலியல் வன்கொடுமை என்பதற்கு வடகிழக்கு பகுதிகளில் இடமே இல்லாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் பாலியல் வன்கொடுமையின் ஊடாக ஒரு இனப்படுகொலையின் ஊடாக இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தை சர்வதேச நாடுகள் உதவியோர் வெற்றிகண்ட இலங்கை அரசு குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் மசாஜ் நிலையங்கள் விபச்சார நிலையங்கள் போன்றவற்றை மறைமுகமாக இயங்கி வருவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதோடு போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளது. போதையில் இளைஞர்கள் இவ்வாறான தீய செயல்களுக்குள் களமிறக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக வடகிழக்கு பகுதிகளில் கல்வி தராதரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதிலும் மிகக்கொடுமையான விடயம் என்னவென்றால் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது இரண்டு வகையாக இடம்பெறுகின்றது. பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றார்கள். மற்றும் பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றார்கள். இதனால் ஒரு கல்விசமுதாயம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. சிறுவயது திருமணம், காதல் விவகாரம், பாடசாலை ஆசிரியர்களினால் துஸ்பிரயோகம், வேலை அலுவலகர்களினால் துஸ்பிரயோகம், குடும்ப வன்முறைகள் உருவாக்கப்பட்டு பாலியல் இலஞ்சம் கோரப்படுகிறது, முகநூல்கள் குறிப்பாக இன்போமேசன் டெக்னோலஜி போன்ற விடயங்களினாலும் சமுதாயத்தில் பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து கொண்டே செல்கிறது.

தமிழ் கலாசாரத்தின்படி ஒருவருக்கு ஒருத்தி என்ற திருமணமே இடம்பெறுகிறது அது சட்டம். சொந்த மனைவியை விட்டுவிட்டு விபச்சார விடுதிகளுக்கும் விலைமாதுகளுடன் தொடர்பை ஏற்படுத்தி குடும்ப வன்முறைகள் உருவாகுவதற்கு காரணமாக அமைகிறது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஊருக்கொரு மகளிர் அமைப்பு இருக்கிறது. சமூக ஏற்பாட்டாளர்கள் இருக்கிறார்கள் இவ்வாறான பாலியல் வன்முறைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெண் சமுதாயத்திற்காக குரல்கொடுத்த ஒரு சிலரை தவிர இந்த அமைப்புக்கள் ஒன்றும் முன்வருவதில்லை. சமூகங்களுக்கிடையே



பாலியல் ரீதியான சமூக விளக்கங்கள் கொடுப்பதில்லை. இதனால் பருவ மங்கைகள் அநாவசியமான செயற்பாடுகளில் களமிறங்கி தமது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நிற்கிறார்கள். இப்படிப்பட்டவர்களே கூடுதல் வன்முறைகளிலும் இறங்கி இவர்களுடைய வாழ்க்கை என்பது கடைத்தெருவிற்கு வருகிறது. அரசாங்கம் இதனைபாராமுகமாகசெயற்பட்டுவருவதனால் நாடளாவிய ரீதியில் விபச்சாரிகளின் அதிகரிப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வன்னி மாவட்டத்தில் 25 பாலியல் விடுதிகளும் யாழ் மாவட்டத்தில் 14 பாலியல் விடுதிகளும், கிழக்கில் 35 பாலியல் விடுதிகளும் இருப்பதாக தரவுகள் கூறப்பட்டாலும் அதனை இனங்கண்டு அப்புறப்படுத்தும் சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. இதற்கு பின்னால் அரசியல்வாதிகளினுடைய பங்களிப்பும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் பாலியல் வன்கொடுமை என்ற நாளாந்த வழக்குகள் நூற்றுக்கு மேற்பட்டவையாகவே அமைந்திருப்பதாக புள்ளிவரைபுகள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணம் காவல்துறை தரவுகளில் இருந்து தெரியவருகிறது. யாழ்.மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றதாக 38 சம்பவங்கள் பதிவாகி உள்ளன. அவற்றுள் காங்கேசன்துறை காவல்துறை பிராந்தியத்தில் 10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதிகமான சம்பவங்கள் அச்சுவேலி காவல்துறை பிரிவில் இடம் பெற்றுள்ளன என யாழ்ப்பாணம் காவல்துறை பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் காவல்துறை பிராந்திய நிலையத்தில் 28 சம்பவங்கள் பதிவாகி உள்ளன. அவற்றுள் அதிகளவான சம்பவங்கள் கொடிகாமம் காவல்துறை பிரிவில் நடைபெற்றுள்ளன. 2022ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது பாலியல் வன்புணர்வு இடம்பெற்றதாக கடந்த ஒன்பதாம் மாதம் 30 ஆம் திகதி வரை எண்ணற்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் காங்கேசன்துறை காவல் பிராந்தியத்தில் 9 சம்பவங்களும் யாழ்ப்பாணம் காவல்துறை பிராந்தியத்தில் 15 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. யாழ்ப்பாணம் காவல்துறை பிராந்தியத்தில் உள்ள சுன்னாகம் காவல் பிரிவில் அதிகமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அதேபோல் 2022 ஆண்டு 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மீதான வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2022ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் காவல்துறை பிராந்தியத்தில் 4 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் காவல்துறை பிராந்தியத்தில் மூன்று சம்பவங்களும் காங்கேசந்துறை காவல்துறை பிராந்தியத்தில் 4 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டு பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் இந்த ஆண்டு அதை மூன்றாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இருந்தால் ஒரு நாட்டின் சமுதாயம் எவ்வாறு தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவது. சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும். குடும்ப வன்முறைகள் என்ற ஒன்று ஒரு புறத்திலிருந்தாலும் அதனை ஓரளவு கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் பாலியல் வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பதை கட்டுப்படுத்த தவறின் குறித்த இனத்தின் கலை, கலாச்சாரம் என்பது பாதிப்புக்குள்ளாக்கப்படும்.

ஆகவே பாடசாலை மட்டத்திலிருந்தே பாலியல் துஷ்பிரயோகங்களினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் வலியுறுத்தப்பட வேண்டும். சமூக ஆர்வலர்களினால் வலியுறுத்தப்பட வேண்டும். பொலிசார் சட்ட வீதி அமைச்சு போன்றவர்களினூடாகவும் இதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு பெண் சுதந்திரமாக இந்த நாட்டில் நடமாடித்திரிவதற்கு வழிவகைகள் வகுத்துக்கொடுக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இராப்பொழுதிலும் ஒரு பெண் தனியாக நடமாடித்திரியக்கூடிய ஒரு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அதனது மறுவடிவம் என்னவென்றால் கூடுதல் சுதந்திரம் அங்கு இடம்பெற்றது என்பதே. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் கட்சிகள் இவ் விவகாரத்தை நன்கு அறிந்தும் வேலியே பயிரை மேய்கின்ற நிலைப்பாடே இன்று சம்பவித்துக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக அநாதை இல்லங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் தாய் தந்தையின்றி வளர்ந்து வருகின்றார்கள். இவர்கள் பெற்றோரினால் கைவிடப்பட்டவர்கள் என்று கூறுவதைவிட தவறான வழியில் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகள் ஏராளமாக தற்பொழுது இருப்பதை அவதானிக்க முடிகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒருபுறம், பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மறுபுறம் தவறான வழியில் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகள் ஒருபுறம் குப்பைத்தொட்டிக்குள் வீசுகின்ற குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்ற மற்றுமொரு பரிதாபநிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. நாள் ஒன்றிற்கு 600 பேர் வரையில் கருக்கலைப்பு நடவடிக்கைகளை தனியார் அரச மருத்துவமனைகளில் ஈடுபட்டு வருவதாக புள்ளிவரைபுகள் தெரிவிக்கின்றன. இத்தகையதொரு நிலைப்பாடு ஏன் இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

யுத்தத்தை காரணம் காட்டிய இந்த இலங்கை அரசு தற்பொழுது கொரேனா வைரசை காரணம் காட்டுகின்றதா கருக்கலைப்புக்கு உச்சபட்ச தண்டனை இந்த நாட்டில் சட்ட உருவாக்கம் கொண்டுவரப்பட வேண்டும். இவ்வாறு இந்த நாட்டினுடைய வளர்ச்சியை குன்றச்செய்கின்ற ஒரு செயற்பாடாக இன்று பாலியல் வன்கொடுமை என்றதொன்று ஆக்கிரமித்து வருகின்றது. ஒரு இனத்தை அழிப்பதற்கு எப்படி எப்படியெல்லாம் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்று இலங்கை அரசு நினைத்து செயற்படுகிறது. ஒரு நாட்டில் படையெடுக்கும் பொழுது யுத்தவெற்றியின் ஒரு கட்டமாக பாலியல் வன்கொடுமைகளை கையில் எடுப்பது வழக்கமாகும். ஆனால் யுத்தம் முடிந்த பின்னரும் அந்த நாட்டில் பாலியல் வன்முறைகள் உருவெடுப்பது என்பது அதற்கு ஏதுவான காரணிகளை உருவாக்குவது என்பது ஏற்புடையது அல்ல. சமூக ஆர்வலர்கள் தங்களை அரசியல் ரீதியாக வளர்த்துக்கொள்ள முட்படுகின்றார்களே தவிர மக்கள் நலன் மீது அக்கறையுடன் செயற்படவில்லை என்பதனையே இத்தகையதொரு செயற்பாடு சமூகத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது.

தற்பொழுது இலங்கையில் அனைத்து பாகங்களிலும் விபச்சாரிகளின் நடமாட்டம் பொது இடங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. பஸ்தரிப்பு நிலையங்களிலும் மக்கள் நடமாடும் பகுதிகளிலும் இவர்களின் நடமாட்டத்தை அவதானிக்க முடிகிறது. சட்ட ரீதியில் இவர்கள் கைது செய்யப்பட்டாலும் ஓரிரு தினங்களில் வெளியில் வந்து விடுகிறார்கள். இந்த விபச்சாரிகளினால் இளம் சமுதாயமே முதலில் பாதிக்கப்படுகின்றது. இதனால் எயிட்ஸ் போன்ற அபாயகரமான தொற்று உருவெடுக்க வழியமைக்கிறது.

ஆகவே இந்த பாலியல் வன்கொடுமைகளில் இருந்து மக்களை தற்பாதுகாத்துக்கொள்ள தமிழ் அரசியல் தலைமைகளும் இந்த நாட்டின் ஜனாதிபதியும் சமூக ஆர்வலர்களும் முன்வர வேண்டும். இனம் மதம் மொழி கலை கலாச்சாரம் போன்றவை பாதுகாக்கப்படுமாக இருந்தால் மட்டுமே அந்த இனத்தின் இருப்பை தக்கவைத்துக்கொள்ள முடியும். திட்டமிட்ட அடிப்படையில் பெண் இனத்திற்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படுகின்ற பாலியல் கலாச்சாரங்கள் விரட்டி அடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாகவே பெண் சமுதாயம் பாதுகாப்பானதொரு நிலைக்கு கொண்டு செல்லப்படும் என்பதே இக்கட்டுரையின் பிரதானமான நோக்கமாகும்.




–கழியோடி–

# விளையாட்டு செய்திகள்

## டி20 உலகக் கிண்ணம் – விராட் கோலி சாதனை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் டி20 உலகக் கிண்ணத்தில் நடைபெற்ற சூப்பர் 12 சுற்று ஆட்டத்தில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 184 ஓட்டங்கள் எடுத்தது. அதிரடியாக ஆடிய விராட் கோலி 44 பந்துகளில் 64 ஓட்டங்கள் குவித்து, இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னதாக நெதர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் 62 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் டி20 உலகக் கிண்ண வரலாற்றில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் கிறிஸ் கெய்லை (965) பின்னுக்கு தள்ளி கோலி 2 வது இடத்துக்கு (989 ஓட்டங்கள்) முன்னேறி இருந்தார்.

இதை தொடர்ந்து தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான கடைசி போட்டியில் 11 ஓட்டங்களை கடந்த போது டி20 உலகக் கிண்ணத்தில் ஆயிரம் ஓட்டங்களை அடித்த 2 வது வீரர் என்ற பெருமையை படைத்தார். அப்போது இந்த பட்டியலில் இலங்கை வீரர் ஜெயவர்தனே 1,016 ஓட்டங்களுடன் முதலிடத்தில் இருந்தார்.

இந்த நிலையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கோலி, ஜெயவர்தனே சாதனையை முறியடித்து டி20 உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார். டி20 உலகக் கிண்ணத்தில் 23 போட்டிகளில் விளையாடியுள்ள கோலி 1,065 ஓட்டங்கள் அடித்துள்ளார். 2 வது இடத்தில் ஜெயவர்தனே (1016 ஓட்டங்கள்- 31 போட்டிகள்) உள்ளார்.



## நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு தெரிவு!

ரி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றில் அன்று (04) நடைபெற்ற நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியில் நியூசிலாந்து அணி 35 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

நாணய சுழற்சியை வென்ற அயர்லாந்து அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 06 விக்கெட்களை இழந்து 185 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய அயர்லாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 09 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

அதனடிப்படையில் நியூசிலாந்து அணி 35 ஓட்டங்களால் போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளது.




## உலக் கிண்ணத்தை வெல்ல பாக்கிஸ்தானுக்கு வாய்ப்பு!

டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 36 ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் (டக்வொர்த் லீவிஸ் முறையில்) தென்னாப்பிரிக்காவை வியாழக்கிழமை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 3 ஆவது இடத்துக்கு முன்னேறியதுடன், அரையிறுதிக்கான பந்தயத்தில் தன்னை தக்கவைத்துக் கொண்டுள்ளது பாகிஸ்தான். தோல்வி கண்டாலும் மாற்றமின்றி 2 ஆவது இடத்தில் நீடிக்கிறது தென்னாப்பிரிக்கா.

இந்த ஆட்டத்தில் முதலில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்கள் சேர்த்தது. அடுத்து தென்னாப்பிரிக்கா இன்னிங்ஸை மழை பாதிக்க, டக்வொர்த் லீவிஸ் முறையில் அந்த அணி 14 ஓவர்களில் 142 ஓட்டங்கள் அடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அத்தனை ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களையே எட்டியது தென்னாப்பிரிக்கா.

பேட்டிங்கிலும், பௌலிங்கிலும் பாகிஸ்தானுக்கு பலம் சேர்த்த ஷாதாப் கான் ஆட்டநாயகன் ஆனார்.

முன்னதாக நாணய சுழற்சியை வென்று துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் முதலில் தடுமாற, மிடில் ஆர்டரில் வந்த இஃப்திகா் அகமது, லோயா் ஆர்டரில் புகுந்த ஷாதாப் கான் அணியைத் தூக்கி நிறுத்தினர். அதிரடியாக ஷாதாப் கான் 22 பந்துகளில் 3 பவுண்டரிகள், 4 சிக்ஸா்களுடன் 52 ஓட்டங்கள் விளாச, அகமது 3 பவுண்டரிகள், 2 சிக்ஸா்களுடன் 51 ஓட்டங்கள் அடித்தார்.

முகமது ஹாரிஸ் 28, முகமது நவாஸ் 28 ஓட்டங்கள் சோ்க்க, இதர விக்கெட்டுகள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தன. தென்னாப்பிரிக்க பௌலிங்கில் அன்ரிஹ் நோர்கியா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பின்னர் தென்னாப்பிரிக்கா பேட் செய்தபோது, 9 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 69 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில், மழையால் ஆட்டம் தடைப்பட்டது.

மீண்டும் தொடர்ந்த ஆட்டத்தில் 'டக்வொர்த் லீவிஸ்' முறையில் தென்னாப்பிரிக்கா 14 ஓவர்களில் 142 ஓட்டங்கள் அடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், எஞ்சியிருக்கும் 5 ஓவர்களில் 73 ஓட்டங்களை நோக்கி ஆடிய அந்த அணியின் விக்கெட்டுகள் பெரிதாக ஓட்டங்கள் சேர்க்காமலேயே அடுத்தடுத்து சரிந்தன.

தலைவர் டெம்பா பவுமா 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 36 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, எய்டன் மார்க்ரம் 20, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 18 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினர்.

ஓவர்கள் முடிவில் லுங்கி கிடி 4, டப்ரைஸ் ஷம்ஸி 1 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தானில் அதிகபட்சமாக ஷாஹீன் அஃப்ரிதி 3, ஷாதாப் கான் 2 விக்கெட்டுகள் சாய்த்தனர்.



## அயர்லாந்து அணி வீரரின் சாதனை

நியூசிலாந்துக்கு எதிராக அயர்லாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோஸ் லிட்டில் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.



நியூசிலாந்து இன்னிங்ஸின் 18வது ஓவரின் 2வது, மூன்றாவது மற்றும் நான்காவது பந்துகளில் கேன் வில்லியம்சன் (61 புள்ளிகள்), ஜேம்ஸ் நீஷம் (0), மிட்செல் சான்டர் (0) ஆகியோரை வீழ்த்தி அவர் ஹாட்ரிக் விக்கெட்களை எடுத்துள்ளார்.

நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்தது.



# உலக பார்வை



## இனி மாதம் 660 கட்டணம் - அதிரடி அறிவிப்பு!

உலகின் நம்பர் ஒன் பணக்காரரான எலான் மஸ்க், டுவிட்டர் நிறுவனத்தை வாங்கி உரிமையாளராகி உள்ளார். அவர் அந்நிறுவனத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். உயர் அதிகாரிகளை பணி நீக்கம் செய்த அவர், நிர்வாக குழுவையும் கூண்டோடு கலைத்தார்.



டுவிட்டரில் அரசியல் தலைவர்கள், பிரபலங்கள் தங்களின் அதிகாரபூர்வ கணக்குகளில் "புளூ டிக்" பயன்படுத்துகிறார்கள். இந்த டுவிட்டர் கணக்கு அவர்களின் அதிகாரப்பூர்வ கணக்குதான் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள டுவிட்டர் கணக்கில் உள்ள பெயருக்கு அருகில் நீலநிற டிக் குறியீடு இருக்கும்.

இதன் மூலம் அந்த பயனாளர்கள் பல்வேறு அம்சங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த புளூ டிக் பயனாளர்களிடம் மாதந்தோறும் 19.99 அமெரிக்க டாலர் (ரூ.1600) கட்டணம் வசூலிக்க டுவிட்டர் நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. இந்தநிலையில் டுவிட்டரில் புளூ டிக்கிற்கு இனி மாதம் 8 டாலர் (இந்திய மதிப்பில் ரூ.660) கட்டணம் வசூல் செய்யப்பட உள்ளதாக எலான் மஸ்க் அதிகாரப்பூர்வமாக அறிவித்து உள்ளார். இக்கட்டணம் செலுத்துவோர், வீடியோ, ஆடியோ போன்றவற்றை கூடுதல் நேரத்துக்கு பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே டுவிட்டரில் விளம்பரங்கள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளின், உயர் அதிகாரிகள் பதவி விலகி உள்ளனர்.

## ரஸ்ய அதிபர் புடின் வெளியிட்ட அறிவித்தல்

அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் யாருக்கும் வெற்றி கிடைக்காது என்று ரஸ்ய அதிபர் புடின்(Vladimir Putin) தெரிவித்துள்ளார். அணு ஆயுதப்போர் எப்போதும் நிகழக்கூடாது என்றும், உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்திய நாடுகள் அணு ஆயுதப் போரைத் தூண்டி விட வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார். அணு ஆயுத மோதலை தவிர்க்கவே ரஷ்யா விரும்புவதாகவும் புடின் (Vladimir Putin) தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் அணு உலைகள் பாதுகாப்பு குறித்து சர்வதேச அணுசக்தி கழகம் கவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்யாவின் அணு ஆயுத நிலைப்பாடு மற்றும் கொள்கை குறித்து அவர் விளக்கம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நெருக்கடிக்குள்ளும் முடிவை மாற்றிய பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்..!

எகிப்தில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் சர்வதேச பருவநிலை மாநாட்டில் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் பங்கேற்கவுள்ளார். இது குறித்து பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கின் ட்விட்டர் பதிவில், பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், நீண்ட கால நோக்கில் பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியாது. புதுப்பிக்கத்தக்க எரிபொருள்களில் கவனத்தை செலுத்தாவிட்டால், எரிசக்தி தன்னிறைவை அடைய முடியாது. அதன் காரணமாகத்தான் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் பருவநிலை மாநாட்டில் பங்கேற்கவிருக்கிறேன். பாதுகாப்பான, நிலைத்தன்மையுடன் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கான கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்காக அந்த மாநாட்டில் நான் கலந்துகொள்வேன் என பதிவிட்டுள்ளார்.



முன்னதாக, எகிப்தில் நடைபெறவிருக்கும் ஐ.நா. பருவநிலை மாநாட்டில், ரிஷி பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டது. இந்த மாதம் 17ஆம் திகதிக்குள் அவசரகால பட்ஜெட்டை தாக்கல் செய்வது உள்பட, உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவர் ரிஷி சுனக் முழு கவனமும் செலுத்த வேண்டியுள்ளது. அது தொடர்பில் பலத்த சர்ச்சை எழுப்பிய நிலையில் தற்போது ரிஷி சுனக் சர்வதேச பருவநிலை மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக கூறியுள்ளார்.

## பிரான்சில் அதிகரிக்கும் இலங்கை, இந்தியர்களின் எண்ணிக்கை..!

இல்து, பிரான்ஸ் மாகாணத்துக்குள் பணிபுரியும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வொன்றில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த ஆய்வினை, INSEE நிறுவனம் மெற்கொண்டுள்ளது.

இல்து பிரான்சுக்குள் 1.25 மில்லியன் பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 22 சதவீதமானோர் வெளிநாட்டவர்களாவர் என இந்த ஆய்வில் கண்டறிப்பட்டுள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது இந்த எண்ணிக்கையானது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இவர்கள் பிரதானமாக, உணவகம் மற்றும் உணவகம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

அதையடுத்து, வீட்டுஉதவியாளர்கள், வீட்டுபணியாளர்கள், கட்டிடதொழிலில்ஈடுபடுபவர்கள் மற்றும் திறன் அடிப்படையிலான பொது பணிகளில் ஈடுபடுகின்றனர். வெளிநாட்டு பணியாளர்களில் 38 சதவீதமானவர்கள் பிரெஞ்சு குடியுரிமை கொண்டுள்ளார்கள் எனவும், ஏனையவர்கள் ஒப்பந்த அடிப்படையிலும், சட்டவிரோதமாகவும் பணிபுரிகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்களில் சமையல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் 50 சதவீதமானவர்களாகும் மற்றும் வீட்டுப் பணியாளர்களில் 61 சதவீதம் குடியேறியவர்கள் பணியாற்றுகின்றனர். இல்து பிரான்ஸில் டிப்ளோமாவுடன் கிட்டத்தட்ட 40,000 வேலை செய்யும் புலம்பெயர்ந்தோர் சாதாரண ஊழியர்களாக வேலை செய்கிறார்கள். இந்த வெளிநாட்டவர்களில் 27 சதவீதமானவர்கள் மக்ரெப் நாடுகளான அல்ஜீரியா, மொராக்கோ மற்றும் துனிசியாவை சேர்ந்தவர்கள். 18 சதவீதமானவர்கள் இலங்கை, இந்தியா உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இன்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இன்னும் 05 நாட்களில் சந்திரகிரகணம்..!

எதிர்வரும் 8 ஆம் திகதி பூரண சந்திர கிரகணம் ஏற்படவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். இந்த சந்திர கிரகணம் ஆசியா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கு முழு சந்திர கிரகணமாக தோன்றும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு அடிவானத்தில் இருந்து மாலை 5.48 மணிக்கு சந்திரன் உதயமாகவுள்ள நிலையில், அதன் இறுதிப் பகுதி மாத்திரம் இலங்கை மக்களுக்கு சந்திர கிரகணமாக தென்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 6.19 மணிக்கு சந்திரகிரகணம் நிறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், முழு சந்திர கிரகணமானது 2025ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி மீண்டும் உலகுக்குத் தெரியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# வாழ்க்கைப் பாடங்கலில் ஒன்று – அன்பும் கருணையும்



சிறைச்சாலையில் முதியவருக்கு தாய்ப்பால் ஊட்டும் இளம் பெண்ணின் இந்த ஓவியம் 30 மில்லியன் யூரோக்களுக்கு விற்கப்பட்டது.

ஓவியம் முரண்பாடானதாகத் தோன்றலாம். ஆனால் அதன் பின்னணியில் உள்ள கதை மனதைத் தொடும் வகையிலும் மற்றும் ஊக்கமளிக்கும் படியாகவும் உள்ளது.

பிரான்சில் லூயி XIV இன் ஆட்சியின் போது ஒரு பாண் துண்டைத் திருடியதற்காக ஏழை மனிதனுக்கு "பட்டினியால் இறக்க" தண்டனை விதிக்கப்பட்டது.

படத்தில் உள்ள பெண் அவருடைய ஒரே மகள் மற்றும் அவருடைய சிறைக்கு வந்த ஒரே பார்வையாளராக இருந்தார். அவள் தினமும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டாள். ஆனால் உணவு எதுவும் கொடுக்க அனுமதிக்கப்படவில்லை.

4 மாதங்களுக்குப் பிறகும் அந்த நபர் எடை குறையாமல் வாழ்ந்து கொண்டிருந்தபோது. அதிகாரிகள் குழப்பமடைந்து. அவரை உளவு பார்க்கத் தொடங்கினர்.

அவர்கள் ஆச்சரியப்படும் வகையில். அவள் குழந்தையின் பாலைப் பகிர்ந்து தன் தந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

முதலில் அவளுக்கு எதிராக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் ஒரு மகளின் தந்தையின் அன்பும் கருணையும் நீதிபதியின் இதயத்தை மென்மையாக்கியது.

# மருதமுனை கடற்கரை உதைபந்து சுற்றுப்போட்டி : கிழக்கின் கேடயம் சபீஸ் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்

மருதமுனை கடற்கரையில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் டாக்டர் சிராஸ் மீராசாஹிப் வெற்றிக்கிண்ண கடற்கரை உதைபந்து சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும். சுற்றுப்போட்டி ஏற்பாட்டு குழுவின் தலைவருமான ஏ.ஆர். அமீர் தலைமையில் இடம்பெற்றது.

மருதமுனை எவரடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மருதமுனை ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக்கழகம் மோதிய முதலாவது காலிறுதி ஆட்டத்தில் 4-0 என்ற கோல் கணக்கில் மருதமுனை எவரடி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. இரண்டாவது காலிறுதியில் மோதிய மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் நிந்தவூர் சவுண்டர்ஸ் விளையாட்டுக்கழகத்தை 3-0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது.

இந்த போட்டிகளில் கிழக்கின் கேடயம் பிரதானியும். அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும். அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான எஸ்.எம். சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலும் டொப் மேன் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எம். றிக்காஸ். ரோஷன் லங்கா நிறுவன உரிமையாளர் முஹம்மட் ரொஷான். ஐ.டி.க்கியூ லெப் நிறுவன பணிப்பாளர் சபூர் ஆதம். கிழக்கின் கேடயம் பொதுச்செயலாளர் யூ.எல்.என் /ஹதா. டீ.எம். நியூஸ் பணிப்பாளரும். கலாச்சார உத்தியோகத்தருமான ஏ.எல்.எம். சினாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





















இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.11.2022 அன்று வெளியிடப்பட்டது.